விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

UNION
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 17 வெள்ளிக்கிழமை (31.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 43

## திருக்கேதீச்சர வளைவினை மீள அமைப்பது தொடர்பில்

### மகா சங்கத்தினருடன் பேசுவோம்
### பௌத்த காங்கிரஸ் தலைவர் யெகத் சுமதிபால

(யாழ்ப்பாணம்)
உடைக்கப்பட்ட திருக்கேதீச்சர வளைவை மீள அமைப்பது தொடர்பில் மகா சங்கத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்துவோம் என அகில இலங்கை ▷23

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிராக வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம்




▷03

## மன்னாரில் வீதி விபத்து

### இளைஞன் பலி



▷03

இந்துக் குருமார்கள் தலைமை ஏற்றால்

# தமிழர்களின் பிரச்சினைகளில் தேரர்கள் தலையிடத் தயார்

### யாழில் ஸ்ரீ போதிராஜ விகாராதிபதி சோபித தேரர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இந்துக் குருமார்கள் தலைமை ஏற்றுச் செயற்பட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தேரர்கள் தலையிடத் தயாராக உள்ளதாக யாழில் ஸ்ரீபோதிராஜ விகாராதிபதி சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**



இந்து பௌத்த ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு நேற்றைய தினம் யாழ் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை அரசியல்வாதிகளுக்கு ஏற்றவகையில் வழிநடத்த நாம் அனுமதிக்கப் போவதில்லை. அதே நேரம் இந்து பௌத்த ஒற்றுமை மூலம் தாய் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லத் தயாராகவுள்ளோம்.

தமிழர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளதை நாம் அறிவோம். தமிழ் அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கு ஏற்ற வகையில் மக்களின் பிரச்சினைகளை அணுகுகிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு இந்து சமயக்குருமார்கள் முன் வரவேண்டும். நாமும் ▷23

## பௌத்த இந்து மாநாட்டில்

### தமிழ் பௌத்த துறவி

(யாழ்ப்பாணம்)
யாழில் நேற்று இடம்பெற்ற பௌத்த இந்து ஒற்றுமைக்கான சர்வதேச மாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் பௌத்த துறவி ஒருவர் கலந்து கொண்டுள்ளார். ▷23

பௌத்த துறவிகளாகிய நாங்கள்

## தமிழ் மக்களின் உரிமையை மீட்டெடுத்துக் கொடுப்போம்

### நல்லூர்க் கந்தன் முன் ஓமல்பே சோபித தேரர் உறுதி

**(யாழ்ப்பாணம்)** தமிழ் மக்களின் உரிமையை மீட்டெடுத்துக் கொடுப்போம் என நல்லூர்க் கந்தன் ஆலயம் முன்பாக வைத்து பெரும்பான்மையினமான பௌத்த துறவிகளாகிய நாங்கள் உறுதியளிக்கின்றோம் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்து - பௌத்த ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் பொருட்டு பௌத்த - இந்து ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு நேற்று வியாழக்கிழமை யாழில் சிறப்பாக இடம்பெற்றது.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலாவது பௌத்த - இந்து ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு இன்றைய நாளில் (நேற்று) யாழில் இடம்பெறுகிறது.

இன்றைய நாள் யாழ்.மக்களுக்கு ஓர் ▷23

## ஐ.தே.க தலைவராக ரணிலே செயற்படுவார்

### செயற்குழுவில் தீர்மானம்

(கொழும்பு)
ரணில் விக்கிரமசிங்கவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக தொடர்ந்தும் செயற்படுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ▷23

திருக்கேதீச்சரத்தை

## புனித பூமியாக மாற்ற தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
திருக்கேதீச்சரத்தை புனித பூமியாக மாற்றுவதற்கு எந்தவித எதிர்ப்பும் இன்றி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இந்து ▷23

## வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

### புன்னாலைக்கட்டுவன் வடக்கில் பட்டப் பகலில் சம்பவம்

(குப்பிழான்)
புன்னாலைக்கட்டுவன் வடக்கில் வீதியால் சென்ற இளம் பெண்ணின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்களால் ▷23

சிங்கள மொழியிலேயே

## தேசிய கீதம் பாடப்படும்

### மகிந்த சமரசிங்க

(கொழும்பு)
சுதந்திர தினத்தன்று தேசிய கீதம் சிங்கள ▷23

## பொறுப்புக்கூறுதல் இலங்கையிடம் இல்லை

### சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)
இலங்கையில் காணாமல் போதல் விடயங்களில் குறைவு காணப்பட்டாலும் ஏனைய குற்றங்களில் பொறுப்புக்கூறல் இல்லை என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

மன்னிப்பு சபையின் ▷23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி முகுந்தா ஐங்கரன்
அவர்களின் தாயார்

## கமலேஸ்வரி சடாச்சரம்

அவர்கள் 28.01.2020 அன்று இறைபதமடைந்துள்ளார். அவரது மறைவினையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

(C-9108)

# விசேட அறிவித்தல்

## நல்லூர் ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ கைலாசப் பிள்ளையார் கோவில் மூன்றாம் கைலாசம்

எதிர்வரும் சனிக்கிழமை 01.02.2020 மாலை 3.00 மணி அளவில் கோவில் வெளிமண்டபத்தில் நடைபெற உள்ளதாக இனந்தெரியாத நபர்களால் அறிவித்தல் ஒன்று ஆலய மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த அறிவித்தலுக்கும் ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரான ஆலய தர்மகர்த்தாவிற்கோ ஆலய நிர்வாக சபைக்கோ எதுவித தொடர்பும் இல்லை என அறியத்தரு கின்றேன்.

தகவல் :
**பிரம்மஸ்ரீ கு.ஆனந்தகுருசாமி சர்மா**
**மேற்படி ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும்**
**தர்மகர்த்தாவும் நிர்வாக சபையினரும்.**

30.01.2020 (2169)

## இந்து பௌத்த கலாசார பேரவையின் வட மாகாண இரண்டாம் மொழி கற்கைநெறி (சிங்களம்) மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

இந்து பௌத்த கலாசார பேரவையால் 11வது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அங்கே கல்வி கற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கல்லூரியில் இடம்பெற்ற இவ்வைபவம் 29.01.2020 அன்று வெகு விமரிசையாக இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், வடமாகாணத்தின் திணைக்கள உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த விழா 200 மாணவர்கள் 600 மணித்தியாலங்கள் இரண்டாம் மொழியை பூர்த்தி செய்த சிங்கள மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நடந்து முடிவடைந்துள்ளது. இம் மாணவர்கள் 600 மணித்தியாலங்கள் 06 மாத காலத்துக்குள் பூர்த்தி செய்தமையால் அவர்களை இலங்கை அரசாங்கம் வண.அத்துரலிய ரத்தின தேரர் அவர்களுக்கூடாக பொறுப்பேற்றுள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இன்னமும் 1000 மாணவர்களை இந்து பௌத்த கலாசார பேரவை 600 மணித்தியாலங்கள் கற்பிப்பதற்கு தயாராக உள்ளது. G.C.E A/L கற்று 03 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களில் வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு அதற்கான அனுமதி பெற்றதும் மாணவர்களுக்கான கற்பித்தல் ஆரம்பமாகும்.

மாணவர்கள் தொடர்ச்சியாக 600 மணித்தியாலங்கள் கல்வி கற்ற பின்பு இலங்கை கல்வி அமைச்சிடம் அவர்களை கையளித்து அவர்களுக்கு கல்வி அமைச்சினால் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வடமாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் இரண்டாம் மொழி சிங்களம் கற்பிப்பதற்கு அரச அனுமதியுடன் நியமிக்கப்படுவார்கள்.

29.01.2020ம் ஆண்டு இதுவரை கல்வி கற்ற 200 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இவ்வாறு தெரிவித்தார் வண.அத்துரலிய ரத்தினதேரர். விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய இடங்கள் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்களிடமும் யாழ்ப்பாணத் தில் உள்ள விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாண இணைப்பாளர்களிடம் சமர்ப்பிக்கலாம்.

இவை அனைத்திற்கும் கற்பித்தல் இலவசம் என்பதை இந்து பௌத்த கலாசார பேரவையினர் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மேலதிக விபரங்கள் தரப்படும்.

**15.02.2020 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**
**தொடர்புகளுக்கு :- 077 271 1181**

**எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன்**
**செயலாளர், இந்து பௌத்த கலாசார பேரவை.**

(C-9108)

## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிட மாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் - வகை II
2. யா/கோப்பாய் மகா வித்தியாலயம் - வகை II
3. யா/இருபாலை C.C.T.M.S - வகை III

**தகைமைகள்:**

➢ **வகை II** பாடசாலைகளுக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் 2** உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவைதரம் 2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து **இலங்கை அதிபர் சேவை தரம் 3** கவனத்தில் கொள்ளப்படும்.

➢ **வகை III** பாடசாலைகளுக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் 3** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக் குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராக கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாட சாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி, பிரதி அதிபராகக் கடமை யாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந்நிபந்தனைக்கு உட்படமாட்டார்கள்.

**குறிப்பு:**

❖ மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பபடிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப் படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவத்தை **14.02.2020** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் **"வலயக்கல்விப் பணிப் பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்குஅனுப்பிவைக்குமாறுகேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2020"** எனக் குறிப்பிடவும். (C-9113)

**திரு.செல்வரட்ணம் சந்திரராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர்.**

**காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்**

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

◎ **முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
◎ **வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**

union assurance
Trust in your tomorrow, today.



**முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்**
◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 25,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

(1267)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 07.02.2020க்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

### ஜனாதிபதியின் கருத்தை கண்டித்து

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு














(நெளுக்குளம்)

வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிற்கு நீதி கோரியும் "காணாமல் போனவர்கள் உயிருடன் இல்லை, இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்ற ஜனாதிபதியின் கருத்தைக் கண்டித்தும் ஆரம்பமாகிய இப்பேரணி பஜார் வீதியின் ஊடாக வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியை அடைந்து மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை வந்தடைந்திருந்தது.

இதன்போது எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, வேண்டும் வேணடும் நீதி வேண்டும், ஜனாதிபதியின செயலை வன்மையாக கண்டிக்கிறோம், வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி.வேண்டாம் என்ற கோ ங்களை எழுப்பியவாறும், இலங்கையில் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு நீதியா, கணவன் மாரை கையளித்த சின்னஞ்சிறு உறவுகளை எண்ணிப்பார் என்ற பதாகைகளையும் தாங்கியவாறு இப்பேரணியில் கலந்து கொண் டிருந்தனர்.

இப் பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்சுகாஸ்மற்றும்ஐந்து மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவாகளின் உறவினர்கள்,பொது அமைபபுக்கள என பலரும்கலந்துகொணடனர். (9-250-299)

## ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களை வெளிக்கொண்டுவர வேண்டும் - பேராயர்

(கொழும்பு)

மக்களின் நன்மை கருதி, ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள அனைவரையும் ஜனாதிபதி ஆணைக்குழு வெளிக் கொண்டுவர வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மலகம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக் கொண்டார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இன, மத, மொழி பேதங்களைக கடந்து, அரசியல் கட்சி பேதங்களைக் கடந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறே தொடர்ச்சியாக பிளவுபட்டு நாம் செயற்பட்டு வந்தால், இந்த நாட்டை எவ்வாறு ஐக்கியப்படுத்துவது?

அதேபோல், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பிரதான காரணகர்த்தாக்கள் யார் என்பதை ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊடாக அறிவிக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இதன் பின்னணியில் உள்ளவர்கள், குண்டை தயாரித்தவர்கள், இதற்கான ஊக்கத்தை வழங்கியவர்கள் என அனைவரது கைகளிலும் இரத்தம் படிந்துள்ளது.

அத்தோடு, இந்த சம்பவத்தை தடுத்து நிறுத்தக்கூடிய சூழ்நிலை கிடைத்தும், அதனை மேற்கொள்ளாதவர்கள் யார் யார் என்பதை கண்டறிந்து தண்டிக்க வேண்டும். எனவே, ஜனாதிபதி ஆணைக்குழு மக்களுக்கான இதன் உண்மைகள் அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7-9)

## இலங்கை வர்த்தக சம்மேளனத்துக்கு புதிய தலைமை அதிகாரி

(கொழும்பு)

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் பொதுச் செயலாளராகவும் மஞ்சுல டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நாளை முதலாம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். இவர் இலங்கையின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் உறுப்பினர், தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்தின் தலைவர், நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி உள்ளிட்ட தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் பல மூத்த பதவிகளை வகித்துள்ளார். (7-9)

### 1000 ரூபா சம்பள அதிகரிப்பிற்கு

## கூட்டு ஒப்பந்தம் தடையென்றால் அதிலிருந்து விலகத் தயார்

## வடிவேல் சுரேஸ் அறிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல் தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பு மகிழ்ச்சிக்குரியது. ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு மற்றும் அதனை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு கூட்டு ஒப்பந்தம் தடையாக இருக்கிறது என்று எவரேனும் கருதுவார்களேயானால் பொறுப்புள்ள தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் எனும் வகையில் அதிலிருந்து விலகிவிடுவதற்கு தயாராகவே இருக்கிறேன் என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம் தற்போது தொழிற்சங்க, அரசியல் மற்றும் தனி மனித அரசியல் விடயமாகவும் பேசுபொருளாகவும ஆக்கப்பட்டு விட்டது. எப்படியிருப்பினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிபபடை சம்பளம் நாளொன்றுக்கு 1000 ரூபாவாக வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

அதற்கமைவாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒவ்வொரு தோட்டத் தொழிலாளருக்கும் 1000 ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (7-9)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் அடுத்த வாரத்திற்கான பயிற்சிகள் நடைபெற இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- ❖ எளியமுறை உடற்பயிற்சிகள்
- ❖ எளியமுறை தியானப்பயிற்சிகள்
- ❖ காயகல்ப்பப் பயிற்சி
- ❖ அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 01.02.2020 சனிக்கிழமை தொடக்கம் 07.02.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
அறிமுகவுரை :மனவளக்கலை பேராசிரியர் சி.முருகானந்தவேல்
பயிற்சிகளை வழங்குபவர்கள் :

மனவளக்கலை பேராசிரியர் வே.பாஸ்கரசுந்தரம்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1ம் நிலை 01.02.2020 சனி மற்றும் 02.02.2020 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
தொ.இல:0212222772

(c-9109)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 - 01 - 1950



மறைவு
30 - 01 - 2020

## திருமதி சற்குணபாலதேவி தணிகாசலம்

புதுறோட், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சற்குணபாலதேவி தணிகாசலம் நேற்று (30.01.2020) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தணிகாசலம் அவர்களின் அன்பு மனைவியாரும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் கந்தையா (சின்னத்துரை) - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் Dr.மயூரனின் (போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும் Dr.நந்தினியின் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) பாசமிகு மாமியாரும் திருமதி வைத்திலிங்கம் பரமேஸ்வரி (நளினி-குடும்ப நல உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), பேராசிரியர் அருந்தவராஜா (கோபி - யாழ் பல்கலைக்கழகம் - வரலாற்றுத்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அட்சரன், ஆருத்திரா, அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைத்தியலிங்கம், அனுஷா (சமூகசேவை உத்தியோகத்தர் - வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் அகஸ்திகாவின் பாசமிகு பெரியதாயாரும் அபிமன், அஞ்சலா, அஸ்வினி, ஆரோகணா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 4.00 மணியளவில் யாழ்.வண்ணை கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 990 7000(மயூரன்)
077 418 0512 (கோபி)

(2163)

தகவல்:-
த.மயூரன்(மகன்)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி ( வெளிவாரி )

1. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
2. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சைகளினை 15.02.2020 (சனிக்கிழமை) தொடக்கம் 01.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 11.02.2020 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 14.02.2020 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
30.01.2020

(c-9111)

## பண்ணையாளர்களுக்கான அறிவித்தல்

யாழ்மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் "விக்ன அபிராமியம்" இணுவில் தெற்கு இணுவில் எனும் முகவரியில் இயங்குகின்ற யாழ்ப்பாண அரச கால்நடை வைத்தியசாலையில் 01.02.2020ம் திகதியிலிருந்து ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களிலும் காலை 8.15 மணி முதல் மாலை 3.30 மணி வரை பண்ணையாளர்கள் சேவையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதிப்பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(c-9104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வணிகமாணி கற்கை நெறி (வெளிவாரி) – 2017
### வெளிவாரிப் பரீட்சைகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற வெளிவாரிப் பரீட்சைகள் கீழ் வரும் அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் காலம் | அனுமதி அட்டை விநியோகம் |
|---|---|---|
| வணிகத்தில் முதலாம் தேர்வு - 2017 முதலாம் அரையாண்டுப் பரீட்சை | 15.02.2020 - 07.03.2020 | 11.02.2020 -14.02.2020 |
| வணிகத்தில் இரண்டாம் தேர்வு – 2017 முதலாம் அரையாண்டுப் பரீட்சை | 15.02.2020 - 01.03.2020 | 11.02.2020 -14.02.2020 |

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

பதிவாளர்
30.01.2020

(c-9112)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

ஊடகக் கற்கைகள் துறை

ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா கற்கைநெறி
(பகுதி நேரம் - இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு - 2020 / 2021

## விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள் துறையினால் நடாத்தப்படுகின்ற ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா (பகுதி நேரம் - இரண்டு ஆண்டுகள்) பயிற்சிநெறிக்கான 2020 / 2021 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இதற்கான அனுமதிக்காகத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள கால எல்லை எதிர்வரும் 17.02.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பிக்கும் முறை, விண்ணப்பிப்பதற்கான தகுதி போன்ற விடயங்கள் 02.01.2020 திகதிய விளம்பரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


(c-9110)

# இந்து-பௌத்த ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு

## யாழில் நேற்று ஆரம்பம்









(யாழ்ப்பாணம்)

இந்து-பௌத்த ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வகையில் இந்து-பௌத்த ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக இந்து-பௌத்த துறவிகள் மற்றும் பிரமுகர்கள் நல்லை ஆதீனத்திலிருந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கி இந்து - பௌத்த கலாசார முறைப்படி ஊர்வலமாக வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நல்லைக்கந்தன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளிலும் அவர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சுவிஸ் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சரவணபவானந்த சுவாமிகள், அமரபுர மகா நிக்காய தர்ம கித்த நிக்காய மகாநாயக்கர், அம்பிலிப்பிட்டிய போதிராஜராமவதி ஓமல்பே சோபித தேரர், யாழ்.நாக விகாராதிபதி மீகாயந்துரே ஸ்ரீவிமலதேரர், அமரபுர மகா நிக்காய மகா நாயக்கர், வணக்கத்துக்குரிய பென்கமுவ நாயக்க நாகிமி, வண பேராசிரியர் அகலகட ஸ்ரீ சுமண நாகினி, செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு.திருமுருகன்.யாழ். இந்தியத்துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், சின்மயாமிசன் சுவாமி சிதாகாசானந்தா, சிவஸ்ரீ ப.சிவலோகநாத தேசிகர் மற்றும் இந்தியா, கனடா, சுவிஸ் நாடுகளைச் சேர்ந்த துறவிகள், தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் பௌத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (9-10-18)

# மக்களின் போராட்டத்தையடுத்து முல்லை.பிரதேச வைத்தியசாலைக்கு இரண்டு வைத்தியர்கள் நியமனம்

(முல்லைத்தீவு)

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரனால் தற்காலிகமாக இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்கக் கோரி நேற்று முன்தினம் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன், ஏற்கனவே பிரதியீடு இல்லாமல் இடமாற்றம் செய்யப்பட்ட வைத்தியர் உடனடியாக மீள நியமிக்கப்படுவார் என்றும் 24 மணித்தியால சேவையை வழங்கும் வகையில் மேலுமொரு வைத்தியர் கிளிநொச்சி பொது




வைத்தியசாலையிலிருந்து வரவழைக்கப்பட்டு நியமிக்கப்படுவார் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், பெப்ரவரி மாதம், நிரந்தர வைத்தியர்கள் நியமனம் இடம்பெறுமெனத் தெரிவித்த அவர், குறித்த பிரதேச வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி குறித்து ஆராயும் முகமாக வைத்தியசாலை அபிவிருத்திக்குழு ஒன்றும் அமைக்கப்படுமெனவும் கூறினார். இதையடுத்தே குறித்த வைத்தியசாலைக்கு தற்காலிகமாக இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

**கணனி திருத்தம்**

**IPhone, Android Phone களும் திருத்தி கொடுக்கப்படும்.**
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம்.
**கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்.**
தொடர்புகளுக்கு :
**ALM Computer System - 077 243 8537**
(9105)

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**
**WALK-IN-INTERVIEW**

**POST OF RESEARCH ASSISTANT (FULL TIME)- ON CONTRACT BASIS- 02 VACANCIES**

**POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) - ON CONTRACT BASIS- 02 VACANCIES**

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME) -ON CONTRACT BASIS- 01 VACANCY**

Walk in Interview for the above positions - On Contract Basis
Will be held on 07.02.2020 from 9.00 AM to 12.00 noon, at the Mini Board Room,
Administration block of the University of Jaffna.
Eligible candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevent original certificates on the date and the time mentioned above.
for further details please refer the University of Jaffna website www.jfn.ac.lk

**Registrar**

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை திறந்தவெளி அரங்கில் அதிபர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக, கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலகங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், கௌரவ விருந்தினர்களாக, சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ந.ரவிவண்ணன், யா/ஸ்தான அ.த.த.க. பாடசாலை அதிபர் ம.முகுந்தன், சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் மு.அசோக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஏ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.பிரதம விருந்தினராக வலி.தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஏ.ஜெபநேசன், சிறப்பு விருந்தினராக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் எம்.ஞானேஸ்வரன்,கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி ஓய்வு நிலை முகாமையாளர் கே.கமலசேகரம் ஆகியோர் கலந்து கொள்வர். (2-5)

---

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டு அரங்கில் அதிபர் அருட் தந்தை ஏ.பி. திருமகன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக Ben Holding நிறுவனத் தலைவர் அலெக்ஸஸ் இந்திரஜித் லோவெல் (MBE), கௌரவ விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.ஈ.ஜி.சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (2-5)

# பொதுக் கூட்டமும் அஞ்சலி நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண, இலங்கை மின்சார சபை ஓய்வுதியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் மறைந்த தலைவர் வ.சுப்பிரமணியத்தின் அஞ்சலி நிகழ்வும் நாளை முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்பாவனையாளர் சேவை நிலையத்தின் உப தலைவர் அ.நாகராஜா தலைமையில் நடைபெறும். (ஜ-5)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான 2 ஆம் பருவ கால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்-வரும் 3 ஆம் திகதி முதல் நிறுவனத்தில் பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாகப்பகுதியில் சமர்ப்பிக்கு மாறும் மேலதிக தகவல்களுக்கு உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## தொழில் உத்தியோகத்தில் வெற்றி தரும் குறியீடு



ஜோதிடத்தில் தொழில் மற்றும் உத்தியோகத்தைக் குறிக்கும் கிரகம் சனியாகும். அந்த சனிக்கிரகம் உச்சமடையும் நட்சத்திரம் ஸ்வாதியாகும். ஸ்வாதி நட்சத்திரத்திற்குரிய பறவை தேனீயாகும். எனவே தொழில் துறையில் எளிதில் வெற்றியடைய வேண்டுமென நினைப்பவர்கள் தேனீ உருவம் பொறித்த மோதிரத்தை கையில் அணிந்து கொள்ளலாம். அல்லது தேனீயின் படத்தை தொழில் செய்யும் இடத்தில் உள்ள சுவரில் ஒட்டி வைக்கலாம்.

தேனீக்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக செயற்படக் கூடியவை. நாமும் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமானால் தேனீயை தினமும் பார்த்துவர வேண்டும்.

ஸ்வாதி நட்சத்திரத்தில் நீச்சமடையும் கிரகம் சூரியனாகும். அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளைக் குறிக்கும் கிரகம் சூரியனாகும். ஸ்வாதி நட்சத்திரத்தின் பட்சியான தேனீ, அரசியல்வாதிகளின் வீட்டிலோ அரசு அதிகாரிகளின் வீட்டிலோ கூடு கட்டினால் அவர்களின் பதவி பறிபோகும். ஆனால் தொழில் அதிபர்களின் வீட்டில் தேனீ கூடு கட்டினால் தொழில் வளர்ச்சியடையும்.

கடந்த நூற்றாண்டு வரை நம் நாட்டு ஆண்களும்,பெண்களும் தேன் கூடு கம்மல் (தேன் கூடு போன்று வடிவமைக்கப்பட்டது) அணிந்து வந்துள்ளனர். அவர்கள் நல்ல சுறுசுறுப்பானவர்களாகவும், நல்ல உழைப்பாளிகளாகவும் இருந்துள்ளனர். தேன் கூடு கம்மல் அணிபவர்களுக்கு ஆயுள் விருத்தியாகும். தீர்க்க ஆயுள் உண்டாகும். சனி ஆயுள்காரகன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஸ்வாதி நட்சத்திரத்தின் அதிபதி ராகுவை மரணக்காரகன் எனக் குறிப்பிடுவர். தேன் கூடு கம்மல் அணிபவர்களுக்கு மரண பயம் நீங்கும்.

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின்

## விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் நடத்தும் தமிழறிஞர் கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை ஞாபகார்த்த பாடசாலை மட்ட விவாதப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

வெற்றிபெறும் பாடசாலைகளுக்கு பெப்ரவரி 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழாவில் வெற்றிக் கேடயமும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படும். பங்குபெறும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :-

போட்டி இணைப்பாளர் - ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ-077 696 0063 ஐத் தொடர்பு கொள்ளுமாறு தமிழ்ச் சங்க த்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-5)

# இராசி பலன்

**மீனம்:** தனவரவு திருப்திகரமாக அமையும், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர்.

**இடபம்:** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் கூடும், பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| சுக்., புத | இராசி பலன் | | |
| சூரி | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் | | |
| | பூரம்,உத்தரம் | | |
| சனி, கேது, குரு | செவ் | | |

31.01.2020
தை 17,வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 2.14 மணிவரை
ரேவதி பிற்பகல் 4.45 மணிவரை
சுபநேரம்- 6.36-8.06 மணிவரை
இராகுகாலம்-11.06-12.36 மணிவரை
நம்பிக்கையே ஏழையின் உணவு
வளவன்

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** கொடுக்கல்-வாங்கல்களில் உருவான மனஸ்தாபம் விலகும், வியாபார விருத்தியுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**வலம்புரி** **021 221 7603,**
விளம்பரத் தொடர்புகளுக்கு **021 567 1532**





# நூல் அறிமுக விழா அழைப்பிதழ்!

**அன்புடையீர்!**

**நிகழும் மங்களகரமான விகாரி வருடம் தைத்திங்கள் 18 ஆம் நாள் பெப்ரவரி 01.2020 சனிக்கிழமை பி.பகல் 2.00 மணிக்கு கனடா ஸர்வமங்களா மங்கள சேவையின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சகல தேவதா மஹோற்சவ பத்ததி என்னும் நூல் இலவச வெளியீட்டு விழா.**

**காலம்:- பெப்ரவரி 01.2020 சனிக்கிழமை பி.பகல் 2.00 மணி**
**இடம்:- நுன்னாலை வடக்கு அல்லையம்பதி முருகன் கோவில் வடிவேலர் திருமண மண்டபத்தில் நடைபெறும்.**

**தாங்கள் சமுகம் தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அன்புடன்
ஈசன் குருக்கள் குடும்பம்-கனடா
ஸர்வ மங்களா மங்கள சேவை-கனடா
நிகழ்வுகள் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.

(C-9106)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 24
உயரம்: 170cm
தகைமை/தொழில் B.Sc(Hons), QS-Singapore
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/ 10433

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 16 ¼
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc , London
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/ 10434

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 29 ½ செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, Uk
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/ 10435

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி செவ் 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:O/L, கடை உதவியாளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/ 10436

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 82 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA பட்டதாரி, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/10459

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: 16 செவ் 7 ல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Dip.in QS
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/ 10460

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 29 ¾ செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc, M.Sc, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்
தொ.இ: G/ 10462


பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 63 ½ செவ் 7 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: BBA(hons), Management Assistant
எதிர்பார்ப்பு: படித்த வரன்
தொ.இ: G/ 10463

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பணி நலன் பாராட்டு

## பங்குத்தந்தை அருட்பணி டியூக் வின்சன்

**(மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளர்)**



மணற்காட்டுப் பங்கிலே 17.01.2016 தொடக்கம் பணிபுரிந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் பங்குத்தந்தை அருட்பணி வின்சன் அடிகளார் எம் மண்ணில் கால்பதித்த நாள் முதல் இன்றுவரை ஆண்டவன் பணியை ஆயரின் வழிநடத்தலில் திறம்பட மேற்கொண்டார். ஆனமீகப் பணியை திறம்பட நிறைவேற்றினார். எமது ஆலய முகப்பினை அழகுற அமைக்க அரும்பாடுபட்டு உழைத்தார். மறையறிவை மேலும் வளர்த்திட இந்தியாவில் இருந்து வருகை தந்த அருட்சகோதரிகளை கிராமத்திலே இருத்தி அவர்கள் மூலமாக பல பணிகளை நிறைவேற்றினார். பக்திச் சபைகள் பலவற்றை உருவாக்கினார். இதன்மூலம் மக்களிடையே அன்புறவும் ஆன்மீகமும் மேலும் வலுவடைந்தது. பழைய பாரம்பரிய கலாசார நடைமுறைகளை கிராமத்தில் சிதைந்து போகாது காத்திட உதவினார். ஆன்மீகப் பணி மட்டும் அவர் பணி என்று கருதாமல் பொது பணிகளிலே அதிகமாக ஆர்வம் காட்டினார். நல்ல சேவைகள் செய்திட நற்பணிமன்றத்தை உருவாக்கினார். பிள்ளைகளின் கல்விக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். பாடசாலையை விசாலமான இடத்தில் புதிதாக அமைக்க வேண்டும் என்று கூறி இதற்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு புதிய பாடசாலையை அமைத்து உயர்தர வகுப்பையும் உருவாக்கினார். கிராமத்தின் வளர்ச்சியில் அதிக விருப்புக்கொண்டு பொது அமைப்புக்களை திறம்பட வழி நடத்தினார். எமது கிராமத்தின் எதிர்கால நன்மை கருதி கிராமத்திற்கு கிடைத்த நிதிகளை நிலையான வைப்பிலிட்டு பலவற்றை உருவாக்கினார். குறிப்பாக கிராம அபிவிருத்தி சங்கத்தின் காப்பாளராகச் செயற்பட்டு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவினார். மருதங்கேணி பிரதேச செயலகத்துடன் அன்புடன் புகளை மேற்கொண்டு பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வழிவகுத்தார். மாவட்ட அரசாங்க அதிபருடன் நெருங்கிப் பழகி அவர் மூலமாக கிராமத்திற்கு கிடைக்கும் வேலைத்திட்டங்களை நிறைவேற்றினார். மாவட்ட பிரதேச துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பல அபிவிருத்தித் திட்டங்களை எமது மணற்காட்டு கிராமத்தில் நிறைவேற்றித் தந்துள்ளார். இடம் மாறிச் செல்லும் புங்குடுதீவுப் பங்கிலும் இறைபணியையும் பொதுப் பணியையும் திறம்பட ஆற்றிட இறையருள் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

**கிராம அபிவிருத்திச் சங்கம், மணற்காடு-J/418.**

(C-99097)





யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பஞ்சதள இராஜகோபுர மஹாகும்பாபிஷேக பெருவிழா நேற்று வியாழக்கிழமை காலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.
(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உலக நாடுகள் தலையிட வேண்டும்

## பொறுப்புக்கூறலை வலியுறுத்தி பிரித்தானியாவில் போராட்டம்





(லண்டன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை புறம்தள்ளி பொறுப்புக் கூறலை கைவிட முற்படும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்து பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்ட மொன்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு நடைபெற்ற இந்த போராட்டத்தில், காணாமற் போனோர் விடயத்தில் உலக நாடுகள் தலையிட்டு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றின் முன் நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டமானது தமிழ் தகவல் நடுவம், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், பிரிட்டன் தமிழர் பேரவை, பழைய மாணவர் சங்கங்கள், திருக்கோயில் அமைப்புக்கள், தமிழ் பாடசாலைகள் உட்பட பல்வேறு புலம்பெயர் அமைப்புகளின் பங்களிப்போடும் ஒழுங்கு செய்யப்பட்டது.

மேலும் இதுவரை இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அல்லது உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## 142 கிலோ கேரளகஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

(கொடிகாமம்)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் உள்ள வீடொன்றிலிருந்து 142 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், அதனைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் சுண்டிக்குளி, பழைய பூங்கா வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

"யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்புப் பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போதே அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் பெறுமதியான நிறை 142 கிலோ 945 கிராம் நிறையுடைய கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அதனை வீட்டில் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 33 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் கஞ்சா போதைப்பொருளும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-114)

## பாராளுமன்ற தேர்தல் வரைக்கும் அபிவிருத்திக்கான சாத்தியங்கள் இல்லை

### பிரதேச சபைத் தவிசாளர் வாமதேவன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் வரைக்கும் அபிவிருத்தி மற்றும் நிதி விடுவிப்புக்களுக்கான சாத்தியம் எவையும் தென்படவில்லை என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருட ஆரம்பத்தில் அபிவிருத்தி மற்றும் நிதி விடுவிப்புக்களுக்கான சாத்தியங்கள் எவையும் இல்லை. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு முறையான வரவு -செலவுத் திட்டம் தயாரிக்கப்படாமையால் அரசிடம் இருந்து நிதி விடுவிப்புக்கள் எவையும் இல்லை. மூன்று மாத கால செலவுக்கே பாராளுமன்றத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்றத் தேர்தல் வரை தேக்க நிலை ஏற்பட வாய்ப்புண்டு. இந்தக் காலகட்டத்தில் சபை தொடர்பான வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துவோம். சபை வேலைகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை நிவர்த்தி செய்ய சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் கம்பெரலிய வேலைத்திட்டத்திற்காக சாவகச்சேரி பிரதேசசபையினர் ஓய்வின்றி உழைத்ததுடன் நூற்றுக்கணக்கான வீதிகள் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-30)

## அரச செலவுகளுக்கான நிதிக்கு புதிய குறைநிரப்பு மதிப்பீட்டு சட்டமூலம்

(கொழும்பு)

அரச செலவுகளுக்கு தேவையான நிதியை ஒதுக்குவதற்காக புதிய குறை நிரப்பு மதிப்பீட்டு சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். மேலும் அவர், கடந்த அரசாங்கம் ஒப்பந்தகார்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு வழங்க வேண்டிய 13 ஆயிரம் கோடியை செலுத்துவதற்காக உள்ளிட்ட அரச செலவீனங்களுக்கு ஏற்கனவே கொண்டு வரப்பட்ட குறை நிரப்பு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதல்ல என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவு வழங்கும்


# சமூக மூலதனத்தை மேம்படுத்துவதில் பாடசாலைகளின் வகிபாகம்: ஒரு கோட்பாட்டு நிலைப்பட்ட விளக்கம்

சமூகவியலையும் கல்வியையும் இணைத்த வகையில் தொடரும் அண்மைக்காலத் துறையிடையிட்ட (interdisciplinary) ஆய்வுகளில் கல்வியும் சமூக மூலதனமும் எனும் விடயம் தொடர்பானவை தனித்துவம் வாய்ந்தவை. கல்வியின்வழி எய்தப்பட வேண்டிய உயரிய சமூக இலட்சியங்கள் எய்தப்படுவதில் உலகளாவிய நிலையில் ஏற்பட்டுள்ள தடுமாற்றங்கள் மற்றும் பின்னடைவுகளின் பின்புலத்தில் அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய ஆய்வுகள் குறிப்பிடும் தடுமாற்றங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு சமுதாய மட்டத்தில் குடியியல் ஒருமைப்பாடு (civic integration) மற்றும் சமூக ஒட்டுணர்வு (social cohesion) என்பவற்றின் தளர்வே காரணம் என்ற விவாதங்கள் ஆய்வாளர்கள் மத்தியில் எழுந்துள்ளன. இந்த ஆய்வுப் போக்குகளின் தடத்தில் பாடசாலைகளுக்கும் சமூக மூலதனத்துக்குமிடையிலான பிணைப்புக் குறித்த விரிவான கருத்தாடல்கள் அவசிமாகின்றன. அதே வேளை சமுதாய மட்டத்தில் பாடசாலைகளின் வழியே மேம்படுத்தப்பட வேண்டிய சமூக மூலதனத்திலான தளர்வு அல்லது பின்னடைவே அதற்கான காரணம் எனும் கருத்து முனைப்புப் பெற்று வருவதால் சமூக முலதனத்தை முன்னேற்றுவதில் பாடசாலைகளின் வகிபாகம் குறித்த கருத்தாடலும் சிந்தனைத் தளமாற்றங்களை ஏற்படுத்தும்.

கல்வி ஒரு சமூகநிறுவனம். அந்த நிறுவனத்தின் தொழிற்பாடு மனித வாழ்வை மேம்படுத்துவதற்கான அதியுன்னதமான இலக்குகளைக்கொண்டமைந்தது. கல்வி தொடர்பான முறைப்படுத்தப்பட்ட இலக்குகளை எய்தும் பொறிமுறையின் இறுதிப் படிநிலைகளான வகுப்பறைகள் விளங்குகின்றன. வகுப்பறைகளில் எய்தத் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கமைவாக மாணவர்கள், ஆசிரியர்கள், கற்றலுக்கான வளங்கள் முதலியவற்றை முகாமை செய்வதற்கான முறைப்படுத்தப்பட்ட ஏற்பாடாகவே பாடசாலைகள் விளங்குகின்றன.

அத்தகைய பாடசாலைகள் சமூகத்தின் ஒரு வலிமைமிக்க கூறாக நிலைத்து விட்டது. பாடசாலைகள் சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான வெளிப்பேறுகளை பலவழிகளில் மேம்படுத்துகின்றன. அதன் வழியே குடும்பம் மற்றும் சமுதாயம் என்பவற்றின் நலவாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் உறுதுணையாகின்றன. இதனால் பாடசாலை, குடும்பம், சமுதாயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு மிக நெருக்கமானது. இத்தகைய தொடர்பின் காரணமாகவே சமூக மூலதனம் மேம்படுத்தப்படுகின்றது.

சமூக மூலதனம் என்பது சமுதாயம் ஒன்றின் பிரதான பண்பாக அமைகின்றது. இதனை பியரே போடியூ, ஜேம்ஸ் கொல்மன், றொபேர்ட் டி. புட்ணம் முதலானவர்கள் பல்வேறு வழிகளில் விளக்கியுள்ளனர். தனியன்களிடையே நின்று நிலைக்கும் ஒரு வலைப்பின்னலே சமூக மூலதனம் என்பது போடியூவின் விளக்கம். அவர் சமூக மூலதனத்தை பொருளாதார மூலதனம், பண்பாட்டு மூலதனம், சமூக மூலதனம் என மூன்று வடிவங்களில்




விளக்கினார். குடும்பம் மற்றும் சமுதாய மட்ட சமூக அமைப்பாண்மைகளை வலிமை பெறச் செய்யும் வகையில் கிடைக்கக் கூடிய வளங்கள் சமூகமூலதனம் என்பார் கொல்மன். ஆரோக்கியமான குடிசார் சமூகத்தின் (civic society) தீர்மானமான பண்புகளே சமூகமூலதனம் என்றார் புட்ணம். சமூகமூலதனத்தை அவை கொண்ட தொழிற்பாடுகளை கருத்திற்கொண்டு பிணைத்தல் சமூகமூலதனம் (bonding social capital), பாலமிடும் சமூக மூலதனம் bridging social capital) இணைக்கும் சமூக மூலதனம் (linking social capital) என்றெல்லாம் வகைப்படுத்தியிருந்தார். குறித்தவொரு மக்கள் குழுவின் அகத்தேயான வாழ்வுக்கான இடை உறவினை பிணைத்தல் சமூக மூலதனம் என்றார். வேறுபட்ட நோக்கு நிலைகள் மற்றும் ஆர்வங்களைக் கொண்ட குழுக்களுக்கிடையிலான உறவைப் பாதுகாப்பது பாலமிடும் சமூக மூலதனம் என்றார்.

வேறுபடும் அதிகார மட்டங்களையுடைய மக்களுக்கிடையிலான தொடர்பை ஏற்படுத்துவது இணைக்கும் சமூகமூலதனம் என்றார். பொதுவாக சமூகமூலதனம் என்பது உறவு சம்பந்தமான விடயம் (relationship matter) என்றும் பெறுமதி வாய்ந்த சமூக வலைப்பின்னல் என்றும் விளக்கப்பட்டது. ஆரம்பத்தில் கிராமியப் பாடசாலைச் சமுதாய மையங்கள் பற்றிய ஹனிபன் கருத்தாடல்களில் சமூக மூலதனம் என்பது சமூக அலகின் ஒன்றிணைந்த உருவாக்கத்துக்கு காரணமான நல்லெண்ணம் (good will), கூட்டுறவான சகவாசம் (fellows hip), ஒத்துணர்வு கொள்ளல் (sympathy), சமூக சம்பந்தம் (social intercourse) முதலானவற்றை பண்படுத்துதலால் விளைவது எனப்பட்டது. இவர்கள் விளக்கிய சமூக மூலதனம் பற்றிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் எவ்வாறு சமூகமூலதனத்தின் மேம்பாட்டுக்குத் துணையாக முடியும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். புட்ணம் என்பவர் சமூக மூலதனத்தை பாடசாலைகளுடன் தொடர்புபடும் வகையில் சுவர்களுக்கு அகத்திலான சமூகமூலதனம் (social capital 'inside the walls'), சுவர்களுக்குப் புறத் திலான சமூகமூலதனம் (social capital 'outside the walls') என இரண்டு அடிப்படைகளில் விளக்கினார். முதலாவது, பாடசாலையின் அகத்தே உள்ள சமூக வலைப்பின்னலைக் கருதுகின்றது. மாணவர்களுக்கிடையிலான வலைப் பின்னலும் உறவும் அவர்களின் கல்விச் செயன்முறை மற்றும் அடையத்துடிக்கும் ஆவல் மட்டம் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்தும்.

இதனால் மாணவர்களுக்கிடையிலான நல்லுறவு, நம்பிக்கை, தொடர்புநிலை, ஒத்துழைப்பு மற்றும் கூட்டுறவு சமூக மூலதனங்களாகின்றன. இவை ஆசிரியர்கள்- பாடசாலை நிர்வாகிகளுக்கிடையேயும் நிலவும். இரண்டாவது, அகன்ற சமுதாயத்துக்கும் பாடசாலைக்குமிடையிலான இணைப்பின் வலைப்பின்னலைக் கருதுகின்றது. பாடசாலைக்கும் குடும்பம் மற்றும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்பு அல்லது வலைப்பின்னலைக் கருதுகின்றது. இதுவும் கல்வி அடைவுக்கு மிக அவசியமாகின்றது.

றொபேட் டி. புட்ணம் என்பவர் எழுதிய **Community-Based Social Capital and Educational Performance** எனும் புலமைசார் கட்டுரையில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் கல்விக்கான உளப்பாங்கும் நடத்தைகளும் சமுதாயம் மற்றும் குடும்பம் என்பவற்றின் பிணைப்பில் தங்கியுள்ளது என்றார். ஆசிரியர் தரம், வகுப்பறை வசதி, ஒரு மாணவருக்காக ஆசிரியர் செலவிடும் நேரம் முதலிய அளவீடுகளை விடவும் சமுதாய மட்டத்திலான சமூக மூலதனம் பற்றிய அளவீடுகளே பரீட்சைப் பெறுபேறுகள் அல்லது இடைவிலகல் அளவு பற்றிய சிறந்த எதிர்வுகூறலுக்கு ஆதாரம் என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்துக்களின்வழி சமூக மூலதனத்தின் மேம்பாட்டில் பாடசாலைகள் அகத்திலும் புறத்திலும் பல்வேறு வழிகளில் பங்கெடுப்பதைப் புரிந்துகொள்ள முடியும். சமூக மூலதனத்தை மேம்படுத்தல் அல்லது பண்படுத்தலில் பாடசாலைக்கும் சமுதாயம் மற்றும் குடும்பம் என்பவற்றுக்குமிடையில் இரு வழித்தொடர்புகள் உள்ளன. சமூக மூலதனங்களான நம்பிக்கை (trust), பரஸ்பர பரிமாற்றம் (reciprocity), சமூக ஒட்டுணர்வு (social cohesion), பங்கேற்பு (participation), சமூகப்பிணைப்பு (social engagement), ஈடுபாடு (commitment), சமூக உறுதுணை (socialsupport), சுயசக்தி பற்றிய மதிப்பீடு (self-efficacy) முதலிய பல்வேறு விடயங்களை பிள்ளைகளிடத்திலும் சமுதாயத்தில் வாழும் மனிதர்களிடையேயும் விருத்திசெய்ய இந்த இருவழித் தொடர்புகள் காரணமாகின்றன. இத்தகைய இருவழித்தொடர்பினால் குடும்ப சமூக மூலதனம், நிறுவன சமூக மூலதனம், அயலவர் சமூக மூலதனம், சமுதாயமட்ட அமைப் பாண்மைக்கான சமூக மூலதனம் என்பன விருத்தி செய்யப்படுகின்றன.

அதாவது பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான இடைத் தொடர்பினால் சமுதாயத்திலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களிடத்தில் சமூகமூலதனம் பண்படுத்தப்படுகின்ற அதேவேளை சமூக மட்டத்தில் நிலவும் சமூக மூலதனம் பாடசாலைகளின் வழியாக கல்வியின் மீது மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதையும் காணலாம்.

ருஸ்ரன் மற்றும் அக்கின்றோடோய் (2002) என்போர் மேற்கொண்ட **Social Capital: Matrix of Surveys** எனும் சமூகப் பகுப்பாய்வு அறிக்கையில் பாடசாலைகள் மேம்படுத்த வேண்டிய சமூக மூலதனம் பற்றிய பருப் பொருள்கள் விளக்கப்பட்டிருந்தன. பங்கேற்பு, சமூகப்பிணைப்பு மற்றும் ஈடுபாடு ஆகிய சமூக மூலதனங்களை மேம்படுத்த பாடசாலைகள் புறப்பாட விதான செயற்பாடுகளை வடிவமைத்தல், பொறுப்பேற்றலுக்கான உளப்பாங்கை ஏற்படுத்தல், சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல், நிதி சேகரிப்புச்செய்தல், தன்னார்வ வேலைகளில் ஈடுபடுதல், உள்ளூர் சூழலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், பொறுப்பேற்கும் பதவி நிலைகளை எடுத்தல், வினைத்திறனான பாடசாலைச் சபைகளை அமைத்தல் முதலிய நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புள்ளது. சுயகட்டுப்பாடு மற்றும் சுயசக்கி பற்றிய மதிப்பீடு சார்ந்த சமூக மூலதனத்தை உருவாக்குவதன் வழி பாடசாலைகள் சுயமதிப்பீட்டின் மேம்பாட்டிலும் மனவெழுச்சிசார் நலவாழ்விலும் சமுதாய மட்டத்திலான தீர்மானமெடுத்தலிலும் பங்காற்றுகின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க...)

# ஐந்து நாட்களில் 100 லீற்றர் கசிப்பு கிளிநொச்சியில் அழிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சாந்தபுரம், கனகாம்பிகை குளம், இரணைமடு குளம் ஆகிய இடங்களில் பாரியளவிலான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் அவற்றை அழிக்கும் செயற்பாடுகளில் இளைஞர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்துவருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 5 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் 1000 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையால் மேற்குறித்த கிராமங்களில், பல்வேறு சமூக சீர்கேடுகள் இடம்பெற்று வருவதுடன், சிறுவர்களின் எதிர்காலம் பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த செயற்பாடுகளை தடுக்கும் நோக்குடன் அக்கிராமங்களைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடி பொலிஸாரின் உதவியுடன் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களை தேடி அழிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

காடுகள் குளங்கள் என பல மறைவான இடங்களில் இந்த கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதால் இளைஞர்கள் மற்றும் பொலிஸார் படகுகள் மூலம் சென்றும் இந்த செயற்பாடுகளை முற்றுகையிட்டு வருகின்றனர்.

தொடர்ந்தும் இவ்வாறு கசிப்பினை அழிக்கும் செயற்பாடுகள் இடம்பெறும் என கிராம இளைஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோரை கிளிநொச்சி மாவட்ட பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-271)

# முல்லை. பிரதேச வைத்தியசாலையின் உண்மை நிலை என்ன? -அதிகாரி விளக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையின் உண்மை நிலை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சுகந்தன் விளக்க அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். குறித்த அறிக்கையில்,

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசால்லயானது ஆரம்ப காலங்களில் மாவட்ட வைத்தியசாலையாக இயங்கி வந்துள்ளது. பின்னர் மாவட்டப் பொது வைத்தியசாலை ஆனது மாஞ்சோலையில் நிர்மாணிக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

இவ் வைத்தியசாலைக்குத் தினமும் சராசரி 150 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தருகின்றனர். இவ் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, பொது மருத்துவச் சிகிச்சை, அடிப்படை ஆய்வுகூட சேவைகள், மற்றும் தொற்றா நோய்க்கான ஆரோக்கிய வாழ்க்கை முறை நிலையத்தின் நடவடிக்கைகள் போன்ற பல சேவைகள் இடம் பெறுகின்றன.

இங்கு நான்கு தாதிய உத்தியோகத்தர்கள், மருந்தாளர் ஒருவர், மருந்துக் கலவையாளர் ஒருவர், ஆய்வுகூடப் பரிசோதகர் ஒருவர் மற்றும் பதினொரு சுகாதாரப் பணியாளர்கள் என மனித வளம் காணப்படுகின்றது. இவ் வைத்தியசாலையானது ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பல அபிவிருத்திகள் அடுத்துவரும் மூன்று வருடங்களிலும் ஏற்படுத்தப்பட உள்ளது.

இவ்வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடமாக நிலையான வைத்தியர் இல்லாத நிலமையே காணப்படுகின்றது. இவ் வைத்தியசாலைக்கு தற்காலிகமாக வேறு வைத்தியசாலை வைத்தியர்களை இங்கு கடமைக்கு அமர்த்துவதும் பின்னர் அவ் வைத்தியசாலைகளில் பிரச்சினைகள் வரும்போது வேறு வைத்தியசாலைகளில் இருந்து வைத்தியர்களைக் கடமைக்கு அமர்த்துவது எனத் தற்காலிக நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் இதற்கான நிரந்தர வைத்தியர்களின் தேவைகள் சுகாதாரத் திணைக்களத்தின் பல்வேறு மட்ட உயர் அதிகாரிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களின் கூட்டங்கள், ஊடகங்கள் போன்ற பல இடங்களிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்தைத் தாபித்தல் மற்றும் மாதிரித் திட்டத்தைத் தயாரித்து அபிவிருத்திகளை மேற்கொள்ளல் போன்ற பல செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது இவ் வைத்திய சாலையில் எமது மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பிரிவுகளிலும் உள்ள வைத்தியர்கள் சுழற்சி முறையில் தமது கடமைகளுக்கு மேலதிகமாக காலை 8 மணி முதல் மதியம் இரண்டு மணி வரை கடமையாற்றி வருகின்றனர். இந்த ஒழுங்கு படுத்தல்களின் போது சில நாட்களில் வைத்தியர் இல்லாத நிலையும் ஏற்படுவதுண்டு.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த பத்து வருடங்களாகவே வைத்தியர்களுக்கான பிரச்சினை நிலவிவருகின்றது மாவட்டத்தைச் சேர்ந்த பல வைத்தியர்களும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பல வைத்தியர்களும் இப்பற்றாக்குறைகளுக்கு மத்தியில் மிகச் சிரமங்களுடன் தங்கள் கடமைகளைச் செய்துவருகின்றனர்.

மாவட்டத்தில் படித்து மாவட்டத்தில் இருந்து தெரிவாகி மருத்துவர்களாகப் பல்வேறு இடங்களிலும் இருக்கும் வைத்தியர்கள் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் இங்கு வருகைதந்து சில வருடங்களுக்கேனும் இங்கே கடமையாற்ற முன்வர வேண்டும். இதை மக்களும் மருத்துவ ஒன்றியங்களும் ஊக்கப்படுத்த வேண்டும். என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# நெல் கொள்வனவு செய்யும் செயற்றிட்டம் ஆரம்பம்





(நெளுக்குளம்)

தேசிய ரீதியில் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நெல்லினை 50 ரூபாவிற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யும் செயற்றிட்டம் நேற்று வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்து லசேன தலைமையில் நெல் சந்தைப் படுத்தும் சபையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்திற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்து வவுனியாவில் உள்ள பல்வேறு களஞ்சியசாலைகளிலும் களஞ்சியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் சுமார் 45 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்பட்ட நிலையில் இம் முறை அதிகளவில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வன்னி கட்டளைத் தளபதி போபித தர்மசிறி, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் தர்மபால செனவிரத்தின, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் ந.கமலதாசன், விவசாய திணைக்களத்தின் அதிகாரி சகிலாபானு உட்பட அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள், விவசாய சம்மேளனத்தின் தலைவர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (9-299-250)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# சமாதான துவிச்சக்கர வண்டி பயணம்



(மன்னார்)

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் பருத்தித்துறையை நோக்கி "சுதந்திர தின சமாதான துவிச்சக்கர வண்டி" பயணத்தை மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நித்தம்புவ பகுதியைச் சேர்ந்த ஜீ.எச்.பீரிஸ் என்பவர் கடந்த 28 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்த "சுதந்திர தின சமாதான துவிச்சக்கர வண்டி பயணம்" நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை மன்னாரை வந்தடைந்தது.

இந்த நிலையிலே மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான குறித்த துவிச்சக்கர வண்டி பயணத்தை மாவட்ட அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர், வீதி போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மன்னாரில் இருந்து ஆரம்பமான குறித்த பயணம் யாழ்ப்பாணம் பருத்தித்துறைக்குச் சென்று அங்கிருந்து முல்லைத்தீவு, திருகோணமலை சென்று அங்கிருந்து மீண்டும் கொழும்பை சென்றடையவுள்ளது.

குறித்த நபர் தொடர்ச்சியாக 10 வருடங்களாக குறித்த "சுதந்திர தின சமாதான துவிச்சக்கர வண்டி" பயணத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# மல்லாவி ஆதார வைத்தியசாலையில் கிணறு அமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மல்லாவி ஆதாரவைத்தியசாலையில் நிலவுகின்ற நீர்த் தட்டுப்பாட்டிற்கு கிணறு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்கின்ற குடும்பங்களின் வைத்திய தேவையினை நிறைவு செய்கின்ற வைத்தியசாலையாக மல்லாவி ஆதாரவைத்தியசாலை காணப்படுகின்ற போதிலும் இவ் வைத்தியசாலையில் நீர்த் தட்டுப்பாடு உள்ளதாகவும் குறித்த நீர்த் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு குறித்த வைத்தியசாலையில் கிணறு அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் நீர்த்தட்டுப்பாடு நிலவுகின்ற போது வெளியில் இருந்து நீரினைப் பெற்றுக் கொள்கின்ற நிலைமை வைத்தியசாலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்தநீர்த் தட்டுப்பாட்டினைத் தீர்ப்பதற்கு கிணற்றின் அவசியம் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற துணுக்காய் பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. (9-350)

# மணல் ஏற்றிச்செல்லும் கனரக வாகனங்களால் மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் ஆரம்ப பாடசாலை முன்பாக கனரக வாகனங்கள் வேகமாகப் பயணிப்பதன் காரணமாக மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

மாங்குளம் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்ற கனரகவாகனங்கள் மாங்குளம் சந்திக்கு வருகை தராமல் ஒட்டுசுட்டானுக்கும் ஏ-9 வீதிக்கும் இடையிலான மாங்குளம் ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதியினைப் பயன்படுத்துவதன் காரணமாக வீதி கடுமையாக சேதமடைந்திருப்பதுடன் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆற்றுப்படுகைகளில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்ற டிப்பர்கள் குறித்த வீதி வழியாக சென்று யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கின்றன.

இது தொடர்பாக மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் அவதானம் செலுத்தும்படி பெற்றோர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் ஆராயப்பட்டது. பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரட்ணம் உத்தரவிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (9-350)

### ரயிலில் மோதுண்டு பசுமாடு உயிரிழப்பு



(நெளுக்குளம்)

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கிச் சென்ற ரயிலுடன் வவுனியாவில் பசுமாடு ஒன்று மோதி உயிரிழந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கிச் சென்ற புகையிரதம் வவுனியா புகையிரத நிலையத்தில் நிறுத்துவதற்கு முற்பட்ட போது குறுக்காக பாய்ந்த பசுமாடு ஒன்று புகையிரதத்துடன் திடீரென்று மோதியதில் பசுமாடு சம்பவ இடத்திலேயே தலைவேறாக துண்டாடப்பட்டு உயிரிழந்துள்ளது.

இதையடுத்து புகையிரதம் நிறுத்தப்பட்டு உயிரிழந்த பசுமாடு புகையிரதக் கடவையிலிருந்து அகற்றப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் யாழ்.நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது. (9-299)

# உவர் நிலங்களாக மாறிவரும் புதுக்குடியிருப்பு கரையோர கிராமங்கள்

## உவர்பரம்பலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உவரடையும் கிராமங்களை இனங்கண்டு அதனைத் தடுப்பதற்கு உவர் தடுப்பணை அமைக்க வேண்டும் எனப் பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

சாலை ஆறு வழியாக உட்புகும் கடல் நீர் இரணைப்பாலை, ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களை உவராக்கி வருகின்றன.

மூங்கிலாறு பகுதியில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரணைப்பாலை, ஆனந்தபுரம் பகுதிகளில் நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறி வருகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் சாலை ஆற்றிற்கு குறுக்கே உவர்த் தடுப்பணை அமைத்து உவர்ப் பரம்பலைத் தடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

உவர்ப் பரம்பல் தொடருமானால் புதுக்குடியிருப்பின் கரையோரக் கிராமங்கள் பெரும் அழிவுகளை எதிர்கொள்ளும் என்பதுடன் பயன்தரும் மரங்களும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் என்பதுடன் குடிநீருக்கான கடும் நெருக்கடி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளன எனப் பொது அமைப்புக்கள் எச்சரித்துள்ளன. (9-350)

## நடமாடும் வைத்திய சேவையினை கிராமங்களில் நடத்தக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுக் கிராமங்களுக்கு நடமாடும் வைத்திய சேவையினை நடத்த வேண்டும் என முத்தையன்கட்டுக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடமாடும் வைத்திய சேவை நடைபெற்றதாகவும் தற்போது ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கே நோயாளர்கள் செல்ல வேண்டிய நிலையில் நடமாடும் வைத்திய சேவையினை முன்னெடுப்பதன் மூலம் முத்தையன்கட்டு மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலை, மாங்குளம் ஆதார வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டும் எனவும் இவ் வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற வளப் பற்றாக்குறைகள் காரணமாக நோயாளர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா பொது வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ் வைத்தியசாலைகளில் கூடுதலான வைத்தியர்கள் பணியாற்றுவதன் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பின்தங்கிய கிராமங்களுக்கு நடமாடும் வைத்திய சேவை நடத்த முடியும் எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. (9-350)

## கரைதுறைப்பற்றிலுள்ள ஆட்களற்ற வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் குடும்பங்கள் வசிக்காத வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொது அமைப்புகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல நிரந்தர வீடுகள் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட்டன. அமைக்கப்பட்ட பல வீடுகளில் குடும்பங்கள் வசிக்காத நிலையில் குறித்த வீடுகளில் சமூக சீர்கேடுகள், கசிப்பு உற்பத்திகள் இடம்பெறுவதாகவும் இது தொடர்பாக பொது அமைப்புகளினால் கிராம உத்தியோகத்தர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் நிரந்தர வீடுகளுக்கு அலைந்து திரியும் நிலையில் பல்வேறு காரணங்களைக் கூறி வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவ்வீடுகளில் வசிக்காததன் காரணமாக சமூக சீர்கேடுகளும் கசிப்பு உற்பத்திகளும் இடம்பெறுவதன் காரணமாக கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு ஆட்களற்ற வீடுகள் இடையூறாக உள்ளன. குறித்த வீடுகள் தொடர்பான விபரங்களை கிராம உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டி வீடுகளற்ற குடும்பங்களுக்கு குறித்த வீடுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் திரட்டிய விபரங்களின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில் 200 இற்கு மேற்பட்ட வீடுகளில் குடும்பங்கள் வசிக்கவில்லை என்ற விபரம் மாவட்டச் செயலகத்திற்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-350)

## கிளிநொச்சியில் குற்றச் செயல்களை தடுக்க பொலிஸார் விசேட நடவடிக்கை


(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் விநாயகபுரம்,கிருஸ்ணபுரம் ஆகிய கிராமங்களில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸாரால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட கோணாவில், காந்தி கிராமம், புதியநகர், விநாயகபுரம், கிருஸ்ணபுரம், ஊற்றுப்புலம் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் கஞ்சா போன்ற போதைப்பொருட்களின் பயன்பாடுகள் அதிகரித்துக் காணப்பட்டதுடன் இதனால் பல்வேறுபட்ட குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்களால் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமையில் கிளிநொச்சிப் பொலிஸார் இணைந்து பொது மக்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் பொலிஸார் சுற்றுக்காவல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் குறித்த பிரதேசங்களில் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன என்றும் இதேபோன்று ஏனைய பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (9-315)

## ஜப்பான் தூதரக அதிகாரியுடன் ரவிகரன் சந்திப்பு



(முல்லைத்தீவு)

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனுக்கும் ஜப்பான் தூதரகத்தின் அரசியல் பிரிவு ஆய்வாளரும் ஆலோசகருமான அகிரா ஹொககுமுராவிற்கும் இடையில் சந்திப்பொன்று முல்லைத்தீவு - கள்ளப்பாடு, வடக்கு பகுதியில் அமைந்துள்ள ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச் சந்திப்பு தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இச் சந்திப்பில் முல்லைத்தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், புதிதாக வந்திருக்கக்கூடிய அரசின் காலத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அரசியல் ரீதியாக உள்ள பிரச்சினைகள், தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலான விடயங்கள், ஒட்டுமொத்த தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை இன அழிப்புத் தொடர்பிலான தீர்மானம் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்டமை மற்றும் அதே இன அழிப்புத் தீர்மானத்திற்கு ஒப்பாக தமிழ்நாடு சட்டசபையில், தமிழ் நாட்டின் மறைந்த முதல்வர் ஜெயலலிதா அம்மையரின் தலைமையில் நிறைவேற்றப்பட்டமை உட்பட, தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் வருகைதந்த குறித்த அதிகாரியிடம் எடுத்துக் கூறியிருந்ததாக மேலும் தெரிவித்தார். (9-350)



முல்லை.புதுக்குடியிருப்பு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடம், சமூகநலன் பண்பாட்டு வார வழிபாட்டு மன்ற அன்னை இல்ல பொங்கல் விழா கடந்த வாரம் இடம்பெற்றது. இந்த நிகழ்வினை தொடர்ந்து குறித்த மன்றத்தின் தலைவர் சக்தி வித்தகன் சுரேஸினால் 65 பேருக்குப் புடைவைகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:- முரசுமோட்டை செய்தியாளர்)




## நூல் வெளியீடு

(நெளுக்குளம்)

வவுனியாவைச் சேர்ந்த ந.கபிலநாத்தின் 22 முகங்கள் நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா கல்வியியற் கல்லூரியின் ஓய்வு பெற்ற பீடாதிபதி க.சுவர்னராஜா தலைமையில் வவுனியா குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (9-299)

# பாரதம்

## மக்களிடம் கொள்கையைக் கொண்டு சேர்ப்பதால் நானும் ஒரு தீவிரவாதி தான்- சீமான்



(சென்னை)
மக்களிடத்தில் முக்கியமான கருத்தை அல்லது கொள் கையை கொண்டு சேர்ப்பதால் நானுமொரு தீவிரவாதிதான் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

மதுரையில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

குறித்த கூட்டத்தில் சீமான் மேலும் கூறியுள்ளதாவது, "ரஜி னியை வைத்து மத்திய அரசு நாடகம் போடுகிறது.

தமிழகத்தில் ஜதரோ கார்பன்,மீதேன் திட்டத்துக்கு மக்கள் கருத்து தேவையில்லை என சட்டம் நிறைவேற்றப்பட்டு ள்ளது. இதற்கு ஸ்ராலின் எதி ர்ப்புத் தெரிவித்தார்.

ஆனால், மீதேன் திட்டத் திற்கு கையெழுத்திட்டவர் அவர் தான். காங்கிரஸ் ஆட்சியின் போது குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதி வேடு கொண்டு வரப்பட்ட போது தி.மு.க.ஆதரவு தெரிவித்தது.

பா.ஜ.கவுக்கு எதிரானது தி.மு.க.என இன்னும் மக்கள் நம்பிக் கொண்டுள்ளனர். மேலும் பயங்கரவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் நாங்கள், எங்கள் கருத்தை, கொள்கையை தீவிர மாக மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்கிறோம். இதனால் நானுமொரு தீவிரவாதிதான்" என அவர் மேலும் தெரி வித்தார். (ஜ-2)

## பாகிஸ்தானுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் இந்தியா செயற்படுகிறது-பாக்.வெளிவிவகார அமைச்சு

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின் அமைதி மற் றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இந்தியத் தலைவர்கள் தொடர்ந்து பேசி வருகின்றனரென அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது.

டில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படையினரின் நிகழ் ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, "இந்திய இராணுவத்திற்கு பாகி ஸ்தானை வீழ்த்த அதிகபட்சம்



ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் மட்டுமே தேவைப்படும்" எனக் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகை யில் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு, நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது, "இந்திய பிரதமரின் பேச்சினை பாகிஸ்தான் மீதான பா.ஜ.க.அரசின் ஆவேசம் நிறை ந்த கருத்தாகவே பார்க்கிறோம்.

பா.ஜ.க. அரசின் கொள்கை கள் மீதான உள்நாட்டு மற்றும் சர்வதேச விமர்சனங்களை திசை திருப்புவதற்கான நடவடி க்கையாகவே இதை கருதுகி றோம்.

எந்தவொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையையும் முறியடிக்க பாகிஸ்தான் மக்கள் மற்றும் இராணுவத்தினர் தயாராக உள்ளனர். அவர்களை யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

பாகிஸ்தானின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சு றுத்தல் ஏற்படும் வகையில் இந் தியத் தலைவர்கள் தொடர்ந்து பேசி வருகின்றனர். இதனை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்" எனவும் கூறப்பட்டு ள்ளது. (ஜ-2)

## தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த நகரை கைப்பற்றிய சிரிய அரச படை



(காபூல்)
சிரியாவில் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய பகுதியை, ரஷ்யப் படைகள் ஆதரவுடன் சிரிய இராணுவம் கைப்பற்றியது.

அலெப்போ மற்றும் டமா ஸ்கஸை இணைக்கும் தீவிர வாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யான மாரெட் அல்நுமான் பகுதி யையே சிரிய இராணுவம் கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து அப் பகுதியிலிருந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து சிரிய அரச படைகள் வெளியிட்டுள்ள அறி க்கையில், 'கடந்த சில நாட்களாக சிரியாவில் பல கிராமங்களிலி ருந்து தீவிரவாத படைகள் அகற் றப்பட்டன. சிரிய மண்ணில் பயங்கரவாதம் இல்லாதவரை இந்தத் தேடுதல் வேட்டை தொட ரும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும், ஐஎஸ் பயங் கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந் துள்ளது. ஐ.எஸ். தீவிர வாதி களின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்க ப்பட்டு விட்டன.

இந்நிலையில் கிளர்ச்சியா ளர்களின் பிடியில் உள்ள கடைசி இடமான இட்லிப் மாகாணத்தில் இறுதிச்சண்டை நடந்து வரு கிறது. சிரியாவில் நடக்கும் உள் நாட்டுப் போர் காரணமாக சுமார் 50 இலட்சத்துக்கும் மேற்பட் டோர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஜ-2)

## மகாத்மா காந்தியின் நினைவுதினம் அனுஷ்டிப்பு







(டில்லி)
மகாத்மா காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு, டில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப் புத்துறை அமைச்சர்கள் உள்ளி ட்ட பல்வேறு தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

தேசத்தந்தை மகாத்மா காந்தி யின் 72 ஆவது நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. நாட்டின் விடுதலைக்காக பாடு பட்டு உயிர்த்தியாகம் செய்த சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் அவர்களது தியாகத்தை நினைவு கூர்ந்து போற்றும் வகையிலும் காந்தி நினைவு நாள் தியாகி கள் தினமாக அனுஷ்டிக்கப்படுகி றது.

மகாத்மா காந்தி நினைவு நாளையொட்டி டில்லி ராஜ்காட் டில் உள்ள அவரது நினைவிடம் மலர்களால் அலங்கரித்து மரி யாதை செலுத்தப்பட்டது.

மகாத்மா காந்தி நினை விடத்தில், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி, பாது காப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதேபோல் பா.ஜ.க. சிரேஷ்ட தலைவரான எல்.கே. அத்வானியும் காந்தி நினை விடத்திற்கு வந்து மரியாதை செலுத்தினார்.


காங்கிரஸ் கட்சியின் இடை க்கால தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன் மோகன் சிங், முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், இராணுவத் தளபதி நரவனே, கடற்படை தளபதி கரம்பீர் சிங், விமானப்படை தளபதி பதூரியா, மற்றும் பல்வேறு அரசியல் கட்சி களின் தலைவர்கள், மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். (ஜ-2)

சார்ஸை

இதுவரை

உலக நாடுக

சுகாதார



(பீஜிங்)
கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சீனாவில் இதுவரை

170
ஆயிர
ந்துள்

பய
39

பய



# வெளிநாடு



# ஸ விஞ்சிய கொரோனா ரை 170 பேர் உயிரிழப்பு !

## டுகளை விழிப்புடன் இருக்குமாறு தார ஸ்தாபனம் அறிவுறுத்து



170 பேர் உயிரிழந்துள்ளதுடன், 7 ஆயிரத்து 711 பேர் பாதிப்படைந்துள்ளதாக சீனா நேற்று உறுதிப்படுத்தியது.

சீனாவில் கடந்த 2002 மற்றும் 2003 ஆம் காலப் பகுதியில் பரவத் தொடங்கிய சுவாசத் தொற்று நோயான சார்ஸ் வைரஸின் தாக்கத்தை விடவும் கொரோனாவின் தாக்கம் அதிகமாகவுள்ளது.

சார்ஸ் வைரஸ் உலகம் முழுவதும் 17 நாடுகளில் பரவி மொத்தமாக 774 பேரை உயிரிழக்கச் செய்தது. இதனால் சீனாவில் 5,327 பேரும், 349 பேரும் உயிரிழந்ததாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியது.

எனினும் கொரோனாவினால் உலகளாவிய ரீதியில் 7,814 பேர் பாதிப்படைந்துள்ளதாக சீன அதிகாரிகளும் உலக சுகாதார அமைப்பும் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸின் பாதிப்பும் உயிரிழப்பு எண்ணிக்கையும் அதிகரித்து வருவதனால் உலக நாடுகள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார அவசரகால திட்டத்தின் தலைவர் மைக்கேல் ரியான் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் பாதிப்பால் உலக நாடுகளில் அவசர நிலைமைகளைப் பிரகடனப்படுத்த வேண்டுமா? என்பது தொடர்பில் ஆராய உலக சுகாதார ஸ்தாபனம் கூடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# சீனாவிலிருந்து வருவோரை தனிமைப்படுத்த ஆஸி திட்டம்

(கன்பெரா)

சீனாவில் இருந்து அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பி வரும் 600 பிரஜைகளை, கிறிஸ்மஸ் தீவில் இரண்டு வாரங்களுக்குத் தனிமைப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது அவுஸ்திரேலியாவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து 1,200 மைல் தொலைவில் கிறிஸ்மஸ் தீவு உள்ளது. ஒலிம்பிக் தகுதிப் போட்டியில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு வந்த சீனாவின் தேசிய மகளிர் கால்பந்து அணி அவுஸ்திரேலியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது. பெப்ரவரி 5 ஆம் திகதி வரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முப்பத்திரண்டு பேரைக் கொண்ட மகளிர் அணி மற்றும் பணியாளர்கள் பிரிஸ் பேனில் உள்ள ஒரு விடுதியில் தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவின் தேசிய மகளிர் கால்பந்து அணி கடந்த வாரம் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட வுஹான் வழியாகப் பயணித்ததாகக் கூறப்படுகின்றது.

சீனாவில் கொரோனா வைரஸால் இறந்தவர்களின் எண்ணிக்கை 170 ஆக உயர்ந்துள்ளதாக சீன தேசிய சுகாதார ஆணையம் (NHC) புதன் கிழமை தெரிவித்துள்ளது. ஜேர்மனியில் நான்கு பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஏற்கனவே பிரான்ஸிலும் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சார்ஸ் மற்றும் இன்புளூ வென்ஸா வைரஸ்களைப் போலவே, புதிய கொரோனா வைரஸும் வயதானவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

கடுமையான சுவாச நோய்த் தொற்றை ஏற்படுத்தக் கூடிய இந்த வைரஸ், ஹூபே மாகாணத்தின் தலை நகரான வுஹானில் உள்ள ஒரு மீன் சந்தையில் சட்டவிரோ தமாக விற்பனை செய்யப்பட்ட வன விலங்குகளிலிருந்து உருவானதாகக் கருதப்படுகிறது. இந்த வைரஸுக்கு தடுப்பூசி எதுவும் இல்லை. இருப்பினும், பலர் சிகிச்சையின் பின்னர் குணமடைந்துள்ளனர். (ஜ-2)

# பயங்கரவாதிகள் தாக்குதல் 39 பேர் பரிதாபமாகப் பலி !

(புர்கினோ பாசோ)

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள புர்கினா பாசோவில் போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில், அப்பாவி பொது மக்கள் 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

வடக்கே அமைந்துள்ள சோவ்ம் மாகாணம் சில்ஹட்ஜி கிராமத்திற்குள் நுழைந்த போகோஹராம் பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நேற்று முன்தினம் (புதன்கிழமை) மேற் கொண்டுள்ளனர்.

மேலும், காயமடைந்த பலர் தற்போது அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50ஆக இருக்கலாம் என



அரசு தொலைக்காட்சியொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இத்தாக்குதல் ஒரு வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் என படையினர் தெரிவித்தனர். புர்கினா பாசோவின் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் 2 ஆயிரம் வீரர்-களை நியமிக்க முயற்சிக்கிறது. மேலும் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் பொது மக்களை பயன்படுத்த நாடாளு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. (ஜ-2)

# ஒடிசாவில் பேருந்து கவிழ்ந்து விபத்து 8 பேர் உயிரிழப்பு, 35 பேர் படுகாயம்

(ஒடிசா)

ஒடிசா மாநிலத்தில் பேருந்தொன்று 25 அடி உயரத்தில் இருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 35 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை இடம்பெற்ற குறித்த விபத்தில் காயமடைந்த பயணிகளுக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.



குறித்த பகுதியில் நிலவி வந்த அடர்த்தியான மூடுபனியால் சாரதிக்கு ஏற்பட்ட பார்வைத் திறன் குறைவால் இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையையும் முன்னெடுத்துள்ளனர். (ஜ-2)

# பயங்கரவாத தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுப்போம்

## பாகிஸ்தானுக்கு இந்தியா எச்சரிக்கை



(சென்னை)

பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தினால், அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம். உறுதியான நடவடிக்கை எடுப்போம் என பாகிஸ்தானுக்கு இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

டில்லியில் "இந்தியாவின் அயல் நாட்டு முதல் கொள்கை, பிராந்திய உணர்வுகள்" பற்றிய 12 ஆவது தெற்காசிய மாநாடு நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரி வித்த மத்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் முரளீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "இந்தப் பிராந்தியத்தில் கணக் கற்ற உயிரிழப்புகளுக்கு வழி நடத்திய பயங்கரவாதத்தின் சவால்களை சந்திக்காத நாடே இல்லை.

ஆனால் ஒரே ஒரு நாடு மட் டும் பயங்கரவாதத்தை தனது பிராந்திய ஈடுபாட்டின் வரை யறுக்கப்பட்ட ஒரு அம்சமாக விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த நாடுதான் பயங்கர வாதத்தின் மையப்புள்ளி, கட்ட மைப்பாளர், ஏற்றுமதியாளர் அடிப்ப டைவாதம் என்பது பயங்கரவாதத்தின் உள்ளடங்கிய அம்சம். பயங்கரவாதத்துக்கான மிக முக்கிய காரணங்களில் ஒன்று. அதற்கு எல்லைகள் தெரியாது.

பயங்கரவாதத்துக்கான மிக முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்துள்ள அடிப்படைவாதம், நமது பிராந்தியத்தில் வளர்ந்து வருகிறது. நாம் அனைவரும் அதற்கு எதிராக கரம் கோர்க்க வேண்டும்.

இந்தியாவுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. இதை சர்வதேச அளவில் எடுத்துச்செல்ல இந்தியா முயற்சித்துள்ளது. தனது அயல் நாடுகளின் முதல் கொள்கை செயற்றிட்டத்தில் சேர்த்தும் உள்ளது.

பயங்கரவாதத்தை இந்தியா சம அளவில் நிராகரித்துள்ளது. இதுதான் பயங்கரவாதத்தை தங்கள் வெளியுறவுக் கொள்கை யின் ஒரு கருவியாக பயன்ப டுத்துகின்ற நாடுகளுக்கு எதிராக நமது கொள்கையை நன்றாக மாற்றி அமைக்க வழிவகுத்தது.

புதிய இந்தியா தனது மண் ணில் தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல் களை நடத்துகிற போது அதை இனியும் வெறுமனே பார்வையாளராக அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டி ருக்காது என்பதையும் காட்டி இருக்கிறோம். நாம் நமது மக்களை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுப் போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# கட்சியின் செயற்குழுவில் இருந்து பொன்சேகா, அஜித் பி.பெரேரா நீக்கம்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி.பெரேரா மற்றும் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்டனர்.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியதாகத் தெரிவித்து. இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்த கட்சி தகவல்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலில் மேற்குறித்த இருவரின் பெயர்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம்; கடற்படையின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர் பில் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தும் வண்ணம் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி செயற்பட்டமையால், நீதிமன்ற அவமதிப்பு விவகாரத்தில் கடற்படையின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் இருவர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டனர்.

5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் பிணையில் உள்ள 8, 9 ஆம் பிரதிவாதிகளான அனுர துஷார மெண்டிஸ் மற்றும் கஸ்தூரிகே காமினி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதன்போது அவ்விருவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த விவகாரத்தில் விளக்கமறியலில் உள்ள சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்னவையும் மேலும் நான்கு பேரையும் நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு சி.ஐ.டியின் பணிப்பாளருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அவ்வாறு குறித்த உத்தரவுக்கு அமைய செயற்படத் தவறினால் சி.ஐ.டி.யின் பணிப்பாளர் மன்றில் நேரடியாக ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் எனவும் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே அந்த உத்தரவில் மேலும் தெரிவித்தார். (ஐ)

# புதிய மின் நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகரமாக முன்னெடுக்கப்படும்

## மகிந்தானந்த உறுதி



(கொழும்பு)

புதிதாக் மின்நிலையம் நிர்மாணிக்கப்படாது அவசர தேவைகளுக்காக மின்கொள்வனவு செய்தமையால் கடந்த அரசாங்கத்தில் மாத்திரம் 604 பில்லியன் நட்டம் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நட்டம் தொடர்பில் உரிய விசாரணைகள் தற்போது முன்னெடுக்கபட்டு வருகின்றன என்றும் புதிய மின்நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகரமாக முன்னெடுக்கப்படும் என்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மின்வலுத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2014 - 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புதிய மின் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

அவசரத் தேவைகளின் போது வெளிநாடுகளில் இருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்யும் முயற்சிகளை மாத்திரம் மேற்கொண்டார்கள். அவசரத் தேவைகளின் பொருட்டு கொள்வனவு செய்த மின்சாரத்தால் மாத்திரம் கடந்த நான்கரை வருட காலத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு 604 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது.

உள்நாட்டில் மின்சார தேவைகளுக்கு எழுந்த கேள்வி நிலைமை மற்றும் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் செயற்றிட்டங்களை கடந்த அரசாங்கத்தில் மின்சாரத் துறைக்கு பொறுப்பாக் இருந்த 5 அமைச்சர்களும் முன்வைக்கவில்லை. மாறாக தங்களின் சுயதேவை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்றிட்டங்களை மாத்திரமே முன்வைத்தார்கள். இதனாலேயே புதிதாக ஒரு மின்நிலையம் நிர்மாணிக்க முடியாமல் போயுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நுரைச்சோலை அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்பட் டது. இதனால் மின்சாரத்திற்கான கேள்வி நிலை பகுதியளவில் குறைவடைந்தன.

தற்போது வறட்சியான கால நிலை காணப்படுவதால் மின்சாரத்திற்கான தட்டுப்பாடு ஏற்படலாம். ஆகவே மேலதிகமாக 200 மெகாவோள்ட் மின் கொள்வனவிற்கு விலைமனு கோரல் விடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மேலதிகமாக 190 மெகாவோள்ட் மின் உற்பத்திக்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிவுள்ள கருணை

இந்த உலகத்திலே கருணை காட்ட வேண்டியது ரொம்ப அவசியம் தான்! இருந்தாலும் எல்லோரிடமும் கருணை காட்டிக் கொண்டு இருக்க முடியாது. அப்படிக் காட்டிக் கொண்டிருந்தால் நம் பாடு ஆபத்து. ஒரு வெறி நாய் உங்களைக் கடிக்க வருகிறது. ஐயோ பாவம் நாய்தானே கடித்துவிட்டுப் போகட்டும் என்று காலையா காட்டிக் கொண்டிருப்பீர்கள். அறிவு வேலை செய்ய வேண்டும். அதன் பின்புதான் கருணை காட்டுவதா? வேண்டாமா? என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒரு பெரியவர் வெளியூர் போய் வீட்டுக்கு வேண்டிய பொருட்களெல்லாம் வாங்கிக் கொண்ட திருப்பி வந்து கொண்டிருந்தார். இருட்டிப் போய் விட்டது. ஒரு அடர்ந்த காட்டு வழியாக தலையிலே மூட்டையோடு நடந்து வந்து கொண்டிருந்தார். புதர் மறைவிலே இருந்த புலி ஒன்று இவரைப் பார்த்து விட்டது. உடனே இவர் மேலே பாய்வதற்காக ஓடி வந்தது. பெரியவர் பார்த்தார். என்ன செய்வது என்றே புரியவில்லை. ஓடிப்போய் ஒரு மரத்துக்குப் பின்பக்கமாக நின்று மறைந்து கொண்டார்.

அந்தப் புலி ஓடிப்போய் அந்த மரத்திற்கு முன் பக்கமாக போய் நின்றது. அந்தப் பக்கம் அவர். இந்தப் பக்கம் புலி. நடுவிலே மரம். புலி நிமிர்ந்து நின்று... முன்னங்கால் இரண்டையும் மரத்துக்கு இரண்டு பக்கமாகவும் நீட்டிக் கொண்டது. அந்தப் பக்கம் நின்றுகொண்டிருந்த பெரியவர் அந்த இரண்டு முன்னங்கால்களையும் இரண்டு கைகளாலையும் கப் என்று கெட்டியாகப் பிடித்துவிட்டார். நடுவிலே மரம். புலியும் அந்தப் பெரியவரும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். பெரியவர் பிடித்த பிடியை விடவில்லை. விட்டுவிட்டால் புலி அருகே வந்துவிடுமே. அதனாலே விடாமல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார். கையெல்லாம் வலிக்க ஆரம்பித்தது. என்ன செய்வது எப்படித் தப்பிக்கிறது ஒன்றும் புரியவில்லை.

அந்த நேரம் பார்த்து அந்த வழியாக ஒரு ஆள் வந்தான். அவன் கையிலே ஒரு துப்பாக்கி இருந்தது. இப்பொழுதுதான் எல்லோருடைய கையிலேயும் அது இருக்கிறதே. துப்பாக்கியோடு அந்த ஆளு வருகிறதைப் பார்த்ததும் நம்ம பெரியவர் ரொம்ப நிம்மதியாக மூச்சு விட்டார். இனிமேல் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் அவருக்கு! சீக்கிரமாக இங்கே வாயேன் என்று அந்த ஆளைப் பார்த்துக் கூப்பிட்டார். அவன் அருகே வந்தான். இதோ பாரப்பா இந்தப் புலியைத் துப்பாக்கியாலே சுட்டுவிடு என்றான். அந்த ஆளு ஜீவகாருண்யம் பேச ஆரம்பித்தான். பெரியவரே புலியும் ஓர் உயிர். நீயும் ஓர் உயிர். ஜீவனுக்குக் கருணை காட்டுகிறவன் நான். அதனாலே நான் புலியை சுடமாட்டேன் என்று சொல்லிவிட்டான்.

அப்படி இல்லேப்பா புலி ஒரு மிருகம். ஆனால் நான் மனிதன். புலி பல பேரைக் கொல்லக் கூடிய விலங்கு. நான் பல பேருக்கு உதவி செய்யக் கூடிய மனிதன். என்னை நம்பி வீட்டிலே மனைவி, மக்கள் எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே இந்த விலங்கை நீ கொன்றுவிடு. ஆறறிவு படைத்த மனிதனும் ஐந்தறிவு படைத்த மிருகமும் ஒன்றா? எது உயர்வு எது தாழ்வு? என்று பகுத்தறிவினாலே பார்க்க வேண்டாமா? ஆபத்து வேளையிலே எனக்கு நீ உதவி செய். அதுதான் நியாயம் என்றான் அவன்.

அதெல்லாம் முடியாது. நான் எப்பவும் அறநெறியைவிட்டு விலக மாட்டேன். புலிக்கு உயிர் வாழ வேண்டும் என்னும் ஆசை உண்டு. அதனாலே ஒரு உயிருக்காக இன்னொரு உயிரைக் கொல்ல மாட்டேன் என்றான் அந்த ஆள். பெரியவர் யோசித்தார். சரி நீ புலியை கொல்ல வேண்டாம். எனக்கு ஒரு உதவியாவது செய் என்றார். அது வேண்டும் என்றால் செய்கிறேன். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றான். எனக்குத் தாகமாக இருக்கிறது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருக்கிறது. அதனாலே சிறிது நேரம் இந்தப் புலியினுடைய காலை எனக்குப் பதிலாகப் பிடித்துக் கொள். நான் போய் வந்து விடுகிறேன் என்றார். துப்பாக்கியைக் கீழே வைத்துக் விட்டு சரி என்று சொல்லி அது மாதிரியே பிடித்துக் கொண்டான்.

பெரியவர் போயிட்டு வந்தார். வந்தவர் மூட்டையைத் தூக்கி தலையிலே வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். அந்த ஆளுக்கு திடுக்கென்று தூக்கிப் போட்டுது. என்னங்க இது. என்னை இப்படி மாட்டி விட்டுவிட்டு வீட்டுக்கு நடையைக் கட்டுகிறீர்களே. இது நியாயமா? என்று கேட்டான். எனக்கு இன்னும் கொஞ்சம் கடமைகள் எல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன் என்று தொடர்ந்து நடக்க ஆரம்பித்தான். இவன் பரிதாபமாகக் கெஞ்ச ஆரம்பித்தான். ஐயா எங்க வீட்டு மனைவி, மக்கள் எல்லாம் எனக்காக எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்களே என்று புலம்பினார். அதுமட்டுமில்லை... இந்தத் துப்பாக்கியை எடுத்துப் புலியைச் சுட்டுவிடுங்க பெரியவரே எனக் கேட்டுக்கொண்டான்.

பெரியவர் பார்த்தார் இப்பதான் உனக்கு நியாயம் எது என்பது புரிந்துள்ளது. புலியை விட நீ உயர்ந்தவன். நீ வாழ்ந்தால் எவ்வளவோ பேருக்கு உதவியாக இருப்பாய். அது வாழ்ந்தால் பல பேருக்குக் கெடுதல் செய்யும். அதனாலே நீதான் வாழ வேண்டும். ஆனால் எனக்குச் சுடத் தெரியாது. அதனாலே நான் புலியின் கையை அதாவது முன்னங்காலை பிடித்திருக்கிறேன். நீ புலியைச் சுடு என்றார். உடனே அந்தப் பெரியவர் மூட்டையைக் கீழே வைத்துவிட்டு புலியைப் பிடித்துக் கொண்டார். அந்த ஆளு அந்த விலங்கைக் கொன்றான். மனிதனைக் காப்பாற்றினான். இதுதான் அறிவுள்ள கருணை என்கிறது. அறிவைப் பயன்படுத்தாமல் கருணை காட்டினால் அது ஆபத்திலேதான் முடியும்.

நம்ம ஆட்கள் கருணை காட்டுவதிலே எத்தனையோ ரகம் இருக்கிறது. அதுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள். ஒரு ஆளு குளத்திலே விழுந்துவிட்டார். நீச்சல் தெரியாது. தத்தளித்துக் கொண்டிருந்தார். இன்னொரு ஆள் அதைப் பார்த்து இரக்கப்பட்டார். உடனே தண்ணீரிலே குதித்து அவரை இழுத்துக் கொண்டு வந்துவிட்டார். என்னைக் காப்பாற்றினதுக்கு ரொம்ப நன்றி. உங்களுடைய ஜீவகாருண்யத்தைப் பாராட்டி ஒரு 50 காசு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபா நோட்டுத்தான் இருக்கிறது. அதுதான் என்ன செய்வது என்று யோசிக்கிறேன் என்றார் அவர். அதுக்கு இவர். அப்படி என்றால் இன்னொரு தடவை இந்த குளத்திலே விழுங்க... காப்பாற்றி விடுகிறேன். ஒரு ரூபாயாக கொடுத்து விடுங்கள் என்றார். இந்தக் கருணையை எந்த ரகத்திலே சேர்க்கிறது.

# மகாத்மாகாந்தியின் நினைவுநாளை முன்னிட்டு

## போதைப்பொருள் பாவனைக்கெதிராக மாபெரும் நடைபவனி



(குப்பிழான்)

மகாத்மா காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு போதைப் பொருள் பாவனைக்கு எதிராக மாபெரும் நடைபவனி யாழ். இந்தியத் துணைத் தூதரகம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், சர்வோதயத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது. யாழ்.இந்தியத் ,துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் தலைமையில் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகிய இந்த நடைபவனியின் ஆரம்பத்தில் சனசமூக நிலையத்திலுள்ள காந்தியின் உருவச் சிலைக்கு யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் உள்ளிட்டோர் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

குறித்த நடைபவனியில் மதத் தலைவர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.மாநகர சபையின் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர், சர்வோதய உறுப்பினர்கள், நாடகக் குழுவினர், பெண்கள், வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

குறித்த நடைபவனியில் போதைப்பொருளுக்கெதிரான ஊர்திகளும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின.

தொடர்ந்து யாழ்ப்பாணம் கார் கில்ஸ் சதுக்க முன்றலில் உள்ள காந்தியின் உருவச் சிலையடியில் மகாத்மா காந்தியின் நினைவு நாளையொட்டிய பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன. (9-18)

## ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்கத்தவறின் தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும்

### பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்கத் தவறும் பட்சத்தில் தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினை விவகாரத்திற்கு தீர்வை பெற்றுத் தருவதாக முற்கால அரசாங்கங்கள் தெரிவித்தன.

ஆனால் குறித்த தொழிலாளர்களின் பிரச்சினைக்கு எந்தவொரு அரசாங்கமும் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

இந்நிலையில் தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள புதிய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள்சம்பளமாக ஆயிரம்ரூபாவைப் பெற்றுத் தருவதாகக் கூறியது.

இருப்பினும் அரசாங்கத்தின் குறித்த அறிவிப்பு தற்போதைய சூழ்நிலையில் ஏற்புடையதல்லவென நாட்டிலுள்ள பெரும்பாலான கட்சிகள் மற்றும் சில சமூக அமைப்புக்கள் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையிலேயே குறி த்த தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனால் தோட்டங்களைப் பொறுப்பேற்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள்

### கிழக்கு ஆளுநர் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மாநகர, நகரப் பிரதேச சபைகளின் பதவி வெற்றிடங்களுக்கு நியமனங்களை வழங்குவது தொடர்பாக உள்ளூராட்சி முதன்மை அங்கத்தவர்களுடன் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்துரையாடலொன்றினை நடத்தியிருந்தார்.

மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்க்ளின் முதன்மை அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு - மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் ஆளுநர், உள்ளூராட்சித் திணைக்கள செயலாளர் யூ.எல்.அப்துல் அஸீஸ், மட்டக்களப்பு மாநகர முதல்வர் ரி.சரவணபவன், ஆணையாளர் கே.சித்திரவேல், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதி முதல்வர் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான இந்தக் கலந்துரையாடலில், மாநகர, நகர, பிரதேச சபைகளின் பதவி வெற்றிடங்களுக்கு நியமனங்களை வழங்குதல், தற்காலிகமாக வேலை செய்பவர்களின் நியமனங்களை நிரந்தர நியமனமாக்குதல், முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்குதல், கழிவு முகாமைத்துவம், குப்பைகளை கொட்டும்இடங்களுக்கான தேவைகள், அதன் அபிவிருத்தி, வேலைகளுக்கு தேவையான வாகனங்களை கொள்வனவு செய்தல், வரி அறவீடு, வீதி அபிவிருத்தி, பொதுக் கட்டடங்கள், சிறிய பாலங்கள் நிர்மாணித்தல், நிலம் குடிநீர் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ஜ)

## வுஹானிலிருந்து வரும் இலங்கை மாணவர்களுக்கு தியத்தலாவையில் 33 தனிமைப்படுத்தப்பட்ட அறைகள்

(கொழும்பு)

வுஹானிலிருந்து வரும் இலங்கை மாணவர்களை வைத்திய பரிசோதனைக்குட்படுத்த தியத்தலாவை இராணுவ முகாமில் 33 தனிமைப்படுத்தப்பட்ட அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் சந்தனா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வுஹானிலிருந்து நாடு திரும்பும் மாணவர்களை விமான நிலையத்திலிருந்து உச்சப் பாதுகாப்புடன் தியத்தலாவைக்கு அழைத்து வந்து, தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க இராணுவம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தியத்தலாவை இராணுவ முகாமில் மருத்துவ ஊழியர்கள் உட்பட இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு ஒரு மாதத்திற்கும் மேலாக 24 மணி நேர கடமையில் இருக்கும்.

பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள அறைகளில் இணைக்கப்பட்ட குளியலறைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும். எந்தவொரு மாணவருக்கும் கொரோனா வைரஸ் தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால் அவர் உடனடியாக தொற்று நோய்கள் வைத்தியசாலைக்கு மாற்றப்படுவார்.(ஜ)

## தற்போதைய நிலைமையில் முகக்கவசம் தேவையில்லை

### தீபா கமகே தெரிவிப்பு



(கொழும்பு)

நோயற்ற நிலைமையில் ஏனைய நபர்களிடமிருந்து நோய் தொற்றும் என்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டு முகத்திரை அணிவது தற்போதைக்கு தேவையில்லை என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் வைத்திய நிபுணர் தீபா கமகே தெரிவித்தார்.

பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போதைய நிலையில் யாருக்கேனும் நோயற்ற நிலைமையில் ஏனைய நபர்களிடமிருந்து நோய் தொற்றும் என்று எண்ணி தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டு முகத்திரை அணிவது தற்போதைக்கு தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## கொரோனா வைரஸை தவிர்ப்பதற்கு முறையான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவும்

### துறைமுகப் பணியாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தவிர்ப்பதற்கு அந்நிறுவனங்களில் முறையான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் துறைமுகப் பணியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அகில இலங்கைத் துறைமுக பொது சேவையாளர் சங்கம் கடிதம் ஒன்றின் மூலம் இலங்கைத் துறைமுக அதிகார சபைத் தலைவரிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அத்தோடு தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி முதலான துறைமுகங்களில் முறையான சுகாதார பாதுகாப்புக்குரிய வலயமாக உறுதிப்படுத்துமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# பொய்களைக் கூறி காலத்தை கடத்துவதே புதிய அரசின் திட்டம்-அசாத்சாலி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இதுவரை எந்தப் பிரேரணையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மார்ச் மாதம் வரைக்கும் பொய்களைத் தெரிவித்து காலத்தைக் கடத்துவதே அரசாங்கத்தின் திட்டமாகும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் காலத்தை கடத்தி வருவதை காண்கின்றோம். ஆரம்பமாக ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவு வைரஸில் சிக்குண்டு ஒரு மாதகாலத்தை கடத்தியிருந்தது. அதன் பின்னர் பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் கணக்கறிக்கையைப் பிடித்துக் கொண்டு செயற்பட்டது. தற்போது கொரோனா வைரஸை காரணம் காட்டி செயற்பட்டு வருகின்றது.

குறிப்பாக அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இதுவரை ஒரு பிரேரணையாவது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் மக்களுக்கு தேவையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான சட்ட திட்டங்களை அங்கீகரித்துக்கொள்ள அரசாங்கத்துக்கு பெரும்பான்மையில்லை. அவ்வாறு சட்டமூலம் கொண்டுவந்து அது பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் அது அரசாங்கத்துக்கு நல்லதல்ல. அதனால் தேர்தலில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்




மையை வழங்கவேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தோற்கடிக்கப்பட்டால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கூற்று நியாயமாகும்.

அத்துடன் அவ்வாறு தோற்கடிக்கப்பட்டால் அந்த விடயத்தை முன்னிலைப்படுத்தியே அரசாங்கத்துக்கு பொதுத் தேர்தலில் பாரிய பிரசாரத்தை கொண்டுசென்று பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கத்திடம் எந்த வேலைத் திட்டமும் இல்லை.

மார்ச் மாதம்வரை அரசாங்கம் எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றப் போவதில்லை. அதனால் தான் பெரும்பான்மை இல்லை என்ற பொய்க்குற்றச்சாட்டை தெரிவித்து வருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொண்டால் சர்வாதிகார ஆட்சியே நாட்டில் இடம்பெறும். 2015இற்கு முன்னர் இடம்பெற்ற அடக்குமுறை ஆட்சியைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகின்றது.

அரசாங்கம் சிங்கள மக்களுக்கு பொய்க்குற்றச்சாட்டுக்களை தெரிவித்தும் இனவாதக் கருத்துக்களை பரப்பியுமே ஆட்சிக்கு வந்தது என்பதை தற்போது சிங்கள மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

ஏனெனில் அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக தெரிவித்த எந்தக் குற்றச்சாட்டையும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மக்களின் எதிர்பார்ப்புக்கள் அரசாங்கத்தால் தகர்த்தெறியப்பட்டுள்ளன-சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 69 இலட்சம் பேரின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் புதிய அரசாங்கத்தால் தகர்த்தெறியப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். சஜித் பிரேமதாச மேலும் கூறியுள்ளதாவது, "69 இலட்சம் பேரின் எதிர்ப்பார்ப்பு இன்று முற்றுமுழுதாக தகர்த்தெறியப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போயுள்ளன. இலவசமாக உரத்தை வழங்குவதாகக் கூறினார்கள். அதனை மேற்கொள்ளவில்லை.

நெல் நிர்ணய விலையில் கொள்வனவு செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அதுவும் நடக்கவில்லை.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை.


இந்த நிலைமைதான் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

இதற்காக பொதுத் தேர்தலைத் தொடர்ந்து புதிய பயணத்தை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை முதலில் பலப்படுத்த வேண்டும்.



இதன் ஊடாக மட்டுமே, புதிய வெற்றிகரமான பயணத்தை மேற்கொள்ள முடியும். தேசிய கொள்கையுடன் நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொனெக்ஸ் 20 பயிற்சிகள் ஆரம்பம்!



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரின் கொனெக்ஸ் 20 என்ற பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன என்று இலங்கை கடற்படையினர் அறிவித்தனர்.


ஆழிகடல் கண்காணிப்பு கப்பல்கள், கரையோர கண்காணிப்பு கப்பல்கள், தாக்குதல் படகுகள் என்ற அனைத்தும் இந்த பயிற்சிகளில் பங்கேற்றுள்ளன.

இந்தப் பயிற்சிகள் இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்தப் பயிற்சிகளில் இலங்கை விமானப்படையின் எம்.ஐ ஹெலிகொப்டர் முதல் நாளில் பங்கேற்றன. இந்தப் நிலையில் பயிற்சிகள் இன்றுவரை கொழும்புக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா வைரஸ் தொடர்பாக வைத்தியர்களின் ஆலோசனைகளை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும்

## அநுர வலியுறுத்து




(கொழும்பு)

அரசியல் விளம்பரங்களை விடுத்து, கொரோனா வைரஸ் தொடர்பாக நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.விபியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியதாவது, "இன்று நாட்டில் கொரோனா வைரஸ் தொடர்பான அச்சம் ஏற்பட்டுள்ளது.

எமது நாடு தீவாகக் காணப்படுகின்றமையால், இந்த வைரஸ் நாட்டுக்குள் வருவதைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு எமக்கு அதிகமாகக் காணப்படுகிறது. விசேடமாக விமான நிலையுத்தின் ஊடாக வருகை தருவோரினால் தான் இந்த வைரஸ் பரவுகிறது.

இதுதொடர்பாக அதிக அக்கறை செலுத்த வேண்டும். இது ஆபத்தான ஒரு நிலைமையாகும். எனவே, விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அதற்கேற்ற தொழில்நுட்பங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு, வைத்தியர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வைரஸ் தொற்று காரணத்தினால் முகமூடித் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சமூக மூலதனத்தை மேம்படுத்துவதில்...

(9 ஆம் பக்க தொடர்ச்சி...)

சமவாய்ப்பை முன்னேற்றல், மாணவர்கள், பெற்றோரின் குரலை வினைத்திறன் மிக்கதாக்கல், மாணவர்களை முக்கியமான பொறுப்புகளை எடுக்க வைத்தல், குழுவேலை, ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டுறவுகளை உருவாக்கல், உளச்சுக வாழ்வை பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களாக்கல், உள்ளீர்த்தல் பாடசாலை முன்னேற்றத் திட்டங்களை உருவாக்கல், மாணவர் சாதனை வழியான பாடசாலை மாண்பினை உறுதிசெய்தல், வினைத்திறனான குடியுரிமைக் கலைத்திட்டத்தை நடைமுறையாக்கல் முதலான வழிமுறைகளை கையாள்வதன் வழி சுயகட்டுப்பாடு மற்றும் சுயசக்கி பற்றிய மதிப்பீடு சார்ந்த சமூகமூலதனத்தை பாடசாலைகள் பண்படுத்த வேண்டும் எனும் எதிர்பார்ப்புள்ளது. நம்பிக்கை, பரஸ்பர பரிமாற்றம், சமூக ஒட்டுணர்வு ஆகிய சமூக மூலதனத்தை மேம்படுத்தல் என்பது வேறுபாடுகளைக் கடந்து வினைத்திறனாகக் கூடிச்செயற்ப டும் சமுதாய உணர்வை பாடசாலைகள் ஏற்படுத்துவதைக் கருதுகின்றது. உள்ளூர் சமுதாயம் பற்றிய ஆழ்ந்த விசாரணை செய்தல், உள்ளூர் சமுதாயம் பற்றிய மாணவர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தல், தரம்மிக்க பராமரிப்பு, வழிகாட்டல் மற்றும் உறுதுணை என்பவற்றை உறுதிப்படுத்தல், சமத்துவம் மற்றும் பல்வகைமையை முன்னேற்றுதல், பாரபட்சங்களுக்கு எதிராகச் செயற்படல், மாணவர்களின் உறுதிப்பாடுமிக்க குரலை வளர்த்தல், மூத்தோர் மீதான நம்பிக்கையைக் கட்டி வளர்த்தல், பரஸ்பரம் ஒருவரை இன்னொருவர் பராமரிக்கும் விருப்பார்வத்தை உருவாக்கல், பாடசாலையை பிரதிபலிக்கும் மாணவர் ஒழுக்க-விழுமியங்களை வளர்த்தல், இன மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வையும் அவை தொடர்பான நல்லிணக்கத்தையும் உறுதி செய்தல், உள்ளூர் தேசிய சர்வதேச மட்டத்தில் விரிந்த வகிபங்கு மாதிரிகளை இனங்காட்டல் முதலான வழிமுறைகளை கையாள்வதன் வழி சுயகட்டுப்பாடு மற்றும் சுயசக்கிபற்றிய மதிப்பீடு சார்ந்த சமூகமூலதனத்தை பாடசாலைகள் பண்படுத்த வேண்டும் எனும் எதிர்பார்ப்புள்ளது. இன்றைய நிலையில் வெகுத்துவிட்ட எதிர்மறையான சமூகப்போக்குகளின் மத்தியில் இங்கு குறிப்பிடப்பட்ட எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் எங்கள் பாடசாலைகள் வெற்றிகரமாகத் தொழிற்படுகின்றனவா? என்பதை ஆழ்ந்து நோக்க வேண்டிய தேவையுள்ளது. பாடசாலைகள் வெற்றிகரமாக தொழிற்படுவதில் சவால்கள் உள்ளதெனின் அவற்றை வெற்றிகொள்வதற்கான தகுந்த உபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டிய அவசியமுள்ளது.



குடும்பம் மற்றும் சமுதாயம் என்பவற்றினுள்ளே சமூகமூலதனத்தை முன்னேற்றுவதில் பாடசாலைகள் பல்வேறு வினைத்திறன் வாய்ந்த உபாயங்களை உபயோகிக்கின்றன. பாடசாலைகளுக்கும் குடும்பம் மற்றும் சமுதாயத்துக்குமிடையே ஏற்படுத்தப்படும் நெருக்கமான இடைத் தொடர்பு இதன்னைச் சாத்தியமாக்குகின்றது. நம்புதலுக்கான உறவுகள் **(trusting relationships)**, முறையில் கற்றலுக்கான "மேய்ப்பர்" குழுக்கள் **(pastoral teams for informal learning)**, வளக்கையாழ்கை **(access to resource)**, சமுதாய மட்ட தலைமைத்துவத்தை வளர்த்தல் **(promoting community leadership)**, சமுதாய அடிப்படையான கலைத்திட்டம் **(community-based curriculum)** உருவாக்கல் முதலான உத்திகளைக் கையாண்டு பாடசாலைக்கும் சமுதாயம் மற்றும் குடும்பத்துக்குமிடையிலான இடைத் தொடர்பை நெருக்கமாக்குவதன் வாயிலாக பாடசாலைகள் சமூகமூலதனத்தின் மேம்பாட்டுக்கு உதவும் என்பது மல்கன், இல்லிச், பார்க் முதலானவர்களின் கருத்தாகும். சமுதாயம் மற்றும் குடும்பத்துக்கும் பாடசாலைக்குமான பிணைப்புக்கான குறிகாட்டிகள் பலவும் சமூக முலதனத்தின் மேம்பாட்டின் குறிகாட்டிகளாகவே அமைகின்றன.

இத்தகைய பிணைப்பினை ஏற்படுத்துவதில் பாடசாலை மட்டங்களில் பல தடைகளும் உள்ளன. இவை தொடர்பாக இருக்கவேண்டிய தூரநோக்கிலான மட்டுப்பாடுகள், இவற்றை நடை முறைப்படுத்தவல்ல தலைமைத்துவத்திலான மட்டுப்பாடுகள், இவற்றை பாடசாலைக்கு வெளியே செயற்படுத்தும் வழிமுறைகளிலான மட்டுப்பாடுகள் என்பன தடைக்காரணிகளாகின்றன. சமூக மட்டத்தில் பல்வேறு புறவிசைகளால் குழப்பநிலைகளும் பிணக்குகளும் அதிகரித்துள்ளன. இந்நிலையில் சமூக மூலதனத்தின் மேம்பாட்டில் சமுதாயம் மற்றும் குடும்பங்களோடு இணைந்த வகையில் பாடசாலைகள் எடுக்க வேண்டிய வகிபாகம் மிகச் சிக்கல்வாய்ந்த குறிக்கோள்களையும் அக்குறிக்கோள்களை எய்தும் சிக்கலான வழிமுறைகளையும் உள்ளடக்கியதாகும். அதிகரித்துவரும் சமூகப்பிரச்சினைகளுக்கும் சமூக, பண்பாட்டு, அரசியல் ரீதியான முரண்பாடுகளுக்கும் சமூக மூலதனத்தின் சிதைவே பின்புலமாக அமைகின்றது என்ற பலரதும் கவலையைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் பாடசாலை மட்டத்திலேயே சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. பாடசாலைமட்டம் என்பது மாணவர்களை மையப்படுத்தியதான கருத்தாக்கமாகவே அமைகின்றது. ஆயினும் பாடசாலை, சமுதாயம் மற்றும் குடும்பம் என்பவற்று க்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் வலைப்பின்னல் முதலியவற்றால் தான் இதை சாத்தியமாக்க முடியும். இதன்வழி "சமுதாயத்துள் தோய்ந்த பாடசாலையும், பாடசாலையுள் தோய்ந்த சமுதாயமும்" பற்றிய கருத்தாக்கத்தின் நடைமுறைத் தளமான சமுதாயப் பாடசாலைகளின் **(community schools)** தேவை மீள வலியுறுத்தப்படுவதை உணர முடிகின்றது. இவ்விடயம் குறித்த ஆழமான ஆய்வுகள் காலத்தின் தேவையாகி விட்டன.

இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன், சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வன்னி மக்களுக்கு வீடுகள் வழங்க மஸ்தான் எம்.பி. நடவடிக்கை



(நெளுக்குளம்)

யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங்களை நிர்மாணித்து வழங்குவதற்காக தோட்ட உட்கட்டமைப்பு சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் நிமல் லங்ஸா மற்றும் அவரது செயலாளர், உயரதிகாரிகளுடனான உயர்மட்ட சந்திப்பொன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானின் பங்கேற்புடன் நடந்த இந்த சந்திப்பில் நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படும் கொங்கிறீட் சட்டக பொருத்து வீடுகளை நிர்மாணித்தல், இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து நாடு திரும்பிய மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை நிர்மாணிக்க குடும்பமொன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்குதல், நீண்டகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வீடற்றிருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வினை காணுதல் என்பன தொடர்பில் காதர் மஸ்தான் இராஜாங்க அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

கொங்கிறீட் சட்டக வீடுகள் தொடர்பில் எழுந்த புரிந்துணர்வின்மை தொடர்பில் வன்னி மாவட்டத்தின் மூன்று அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திட்டப் பணிப்பாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் ஆகியோருடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் பதுளைக்கு விஜயம் செய்த மேற்படி குழுவினர் அங்கு அமைக்கப்படும் கொங்கிறீட் வீடுகளை பார்வையிட்டதுடன் அவற்றில் சிறு மாற்றங்களை செய்து வன்னி மாவட்டத்திலும் அவற்றை அமைப்பதற்கு பரிந்துரைத்த விடயமும் காதர் மஸ்தானினால் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டதுடன் வடகிழக்கு பிராந்தியத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட 7000 வீடுகளில் 4500 வீடுகளை வன்னி மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் மக்கள் பார்வைக்காக மூன்று மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதிரி வீடுகளை நிர்மாணிக்கவும் அவரால் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. (9-299)

# தடயவியல் கணக்காய்வு அறிக்கையில் அரசை பலவீனப்படுத்த முடியாது

## காஞ்சன திட்டவட்டம்

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூர் செல்வதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே வாய்ப்பளித்தார். அதனால் தடயவியல் கணக்காய்வு அறிக்கையினை கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது என கடற்றொழில் மற்றும் நீர்வள மூலங்கள் பிரதியமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த மாதம் இரு நாள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள தடயவியல் கணக்காய்வு அறிக்கையின் உண்மைத் தன்மையை மறைக்க மக்கள் விடுதலை முன்னணியினரும், எதிர்க் கட்சியினரும் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பிணைமுறி மோசடி இடம்பெற்றது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் எண்ணமே எதிரணியினர் மத்தியில் காணப்படுகின்றது.

தடயவியல் அறிக்கையில் 2002-2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல்-வாங்கலில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2003 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மோசடி இடம்பெற்றுள்ளது.

அதற்கான உரிய ஆவணங்கள் மத்திய வங்கியின் ஊடாக கிடைக்கப் பெறாமையால் இக்காலகட்டத்திற்குரிய பிணைமுறி கொடுக்கல் -வாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க முடியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தார். ஆகவே இதற்கு ஒரு பகுதி பொறுப்பை அவர் ஏற்க வேண்டும்.

மறுபுறம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிணைமுறி விநியோகத்தால் மத்திய வங்கிக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# கடற்றொழிலாளர்களுக்கு தொழில் மீதான நம்பிக்கையை ஏற்படுத்த ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் - டக்ளஸ்



(மாளிகாவத்தை)

கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்கள் மத்தியில் ஆர்வத்தினை ஏற்படுத்தி கடற்றொழில் துறையில் விரைவான அபிவிருத்தியை எட்டுவதற்கு தொழில் தொடர்பான நம்பிக்கையை கடற்றொழிலாளர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தினை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்கு தொடர்ந்தும் பயனாளிகளை உள்வாங்குவது தொடர்பான கலந்துரையாடல், ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகளுக்கும் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது, மீண்டும் ஓய்வூதியத்திற்கு கடற்றொழிலாளர்களை உள்வாங்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மீண்டும் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான சாதக, பாதகங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட நிலையில், அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்கியதுடன் அது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் அமைச்சரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுத்தல் வழங்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் ஊடாக சுமார் 69 ஆயிரம் பயனாளிகள் உள்வாங்கப்பட்ட போதும் நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக பயனாளிகளை உள்வாங்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறெனினும் தற்போது சுமார் 4860 கடற்றொழிலாளர்கள் ஓய்வூதியத்தினைப் பெற்று வருகின்ற நிலையில், தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்றவகையில் ஓய்வூதியத் திட்டத்தினை மீளமைத்து தொடர்ந்து பயனாளிகளை உள்வாங்கு வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடற்றொழில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான புதிய இலக்குகளை நிர்ணயித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் செயற்பட்டு வருகின்ற நிலையில், கடற்றொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓய்வூதியம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன் வீட்டுத் திட்டம் மற்றும் தொழிலாளர்களுக்கான நட்டஈடு வழங்கப்படுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


# குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ரணிலிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் குறித்து முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் ரணிலின் வீட்டிற்கு சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக் குழு இந்த வாக்குமூலத்தைப் பெற்றதாகவும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான முன்கூட்டிய எச்சரிக்கைகளை அந்நாள் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அறிந்திருந்தாரா? என்பது



பற்றியே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். (ஜ)

## ரயில் மோதி ஒருவர் பலி

(பதுளை)

பதுளையிலிருந்து கண்டிக்கு பொருட்கள் ஏற்றிச் சென்று கொண்டிருந்த ரயிலில் மோதுண்ட தோட்டத் தொழிலாளியொருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இச் சம்பவம் தெமோதரைக்கும் எல்ல ரயில் நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

பதுளை - சவ்தம் பெருந்தோட்ட தொழிற்சாலைப் பிரிவைச் சேர்ந்த ஆறுமுகம் பேரின்பநாதன் என்ற 46 வயது நிரம்பிய தோட்டத் தொழிலாளியே ரயிலில் மோதுண்டு பலியானவராவார். (ஜ)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1962

லோஜி




கம்சன்




புவியரசி




சஜீவன்




கார்த்தி




கலக்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி அர்ஜூன மகேந்திரன் என ரணிலே கூறியுள்ளார்

## வீரகுமார சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாகக் கூறியிருக்கிறார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையில் நாம் செயற்படுவதாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவ்வாறு குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை சுதந்திரக் கட்சிக்கு கிடையாது. இதற்கு முன்னரும் நாம் அவ்வாறு செயற்பட்டதில்லை. இனியும் செயற்படப் போவதில்லை.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அத்தோடு அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, கபிர் ஹாசிம் உள்ளிட்டோருக்கும் இந்த பாரிய மோசடியில் பங்குண்டு.

எனவே அர்ஜுன மகேந்திரன் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# 19வது திருத்தம் குறித்து அரசாங்கத்தின் உள்நோக்கத்தை புரிந்துகொள்ள முடியாதளவிற்கு மக்கள் முட்டாள்களில்லை

## அசோக அபேசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்திய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை.

உண்மையில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைத்து மீண்டும் ஆட்சியதிகாரத்தை தனியொரு குடும்பத்தின்வசம் தக்கவைத்துக் கொள்வதற்காகவே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கோருகிறது.

ஆனால் இதனைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதளவிற்கு மக்கள் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

தற்போது சவாலாக மாறியிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு கட்சி பேதங்களைக் கடந்து நாமனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். ஆனால் இந்நிலை தொடர்பில் அரசாங்கம் இன்னும் விரிவான அடிப்படைகளில் சிந்திக்கவில்லை என்பது புலனாகின்றது.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்களின்றி தற்போது ஒருமித்து செயற்பட வேண்டும் என்பதாலேயே விரைவாகப் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அதனூடாக கொரோனாவைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு ஏனைய அரசியல் கட்சிகள் தமது ஒத்துழைப்பை வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

அதேபோன்று வைரஸ்தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் விதமாக விமானநிலையத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தேன்.

ஆனால் அரசாங்கம் போதிய முன்னாயத்தங்களை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் சீனாவிலிருந்து இலங்கைக்கு வரும் விமானங்கள் பிரத்தியேக இடமொன்றில் தரையிறக்கப்பட்டு, பயணிகள் அனைவரும் பேருந்து ஒன்றின் ஊடாகக் கொண்டு செல்லப்பட்டு, விசேட பிரிவொன்றில் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் அவ்வாறு வெளியேறும் பயணிகள் நடமாடும் இடங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றைப் பேணுவது மிகவும் பயனுடையதாக அமையும் என்று அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கின்றோம்.

அதனூடாக கொரோனாவைரஸ் பரவுவதையும் விமான நிலையத்திலிருந்து வெளியேறிய பயணிகளில் எவருக்கேனும் நோய்த்தொற்று காணப்படுமாயின் அவர்களைக் கண்டறிவதற்கும் இலகுவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்லத்தம்பி சுரேந்திரா கடந்த 20 ஆம் திகதி மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சுன்னாகம் கொற்றாவத்தையைச் சேர்ந்த இவர் சிறந்த சமூகசேவையாளராவார். (ஜ-5)

# செய்தித்துளிகள்

## 10 கைத்துப்பாக்கிகள், போதைப்பொருளுடன் இரு பெண்கள் உட்பட 3 பேர் கைது

(ஹொரணை)

ஹொரணை பகுதியில் கைத்துப்பாக்கிகள், அவற்றுக்குப் பயன்படுத்தும் மகசின்கள் மற்றும் பெரும் தொகையான போதைப் பொருட்களுடன் 3 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் இரு பெண்கள் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 192 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருட்களும் 10 கைத்துப்பாக்கிகள் மற்றும் அவற்றுக்குப் பயன்படுத்தும் 19 மகசின்களை பொலிஸார் கைப்பற்றினர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ)

## கனரக வாகன சில்லில் சிக்கி நபரொருவர் பரிதாபமாகப்பலி

(கந்தானை)

கந்தானை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கந்தானை பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை கந்தானை பகுதியில் இடம்பெற்ற குறித்த வாகன விபத்தில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபர் ஒருவரே இவ்வாறு கனரக வாகனமொன்றின் சில்லில் சிக்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபரின் உடை கனரக வாகனத்தின் சில்லில் சிக்கியதில், குறித்த நபர் நிலைதடுமாறி கனரக வாகனத்தின் கீழ்ப்புறம் விழுந்துள்ளமையால் குறித்த வாகனம் நபரின் மேலேறியதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## கொரோனாவிலிருந்து பாதுகாக்க ஆயுர்வேத மருந்து அறிமுகம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் சுதேசிய மருத்துவத் திணைக்களம் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து முன் பாதுகாப்பதற்கு ஆயுர்வேத பாணி மற்றும் மருந்துத் தூளை அறிமுகப்படுத்தியது.

இந்த மருந்து வகைகள் கொழும்பு மாநகர சபையின் ஊடாக நாடளாவிய ரீதியிலுள்ள 20 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஜ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 110 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 320 | 250 | 250 | 300 |
| தக்காளி | 450 | 370 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 |
| கோவா | 140 | 150 | 120 | 160 |
| கரட் | 320 | 400 | 300 | 520 |
| பூசணி | 140 | 120 | 90 | 160 |
| புடோல் | 140 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 300-500 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 100 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 230 | 150 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 250 | 270 | 210 | 240 |
| லீக்ஸ் | 300 | 270 | 340 | 400 |
| பீற்றூட் | 160 | 340 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 280 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 70 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 30-50 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 300 |
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | — | 120 | 120 |




# நீதி தவறாத மன்னன்



முன்னொரு காலத்தில் நீதி தவறாதமன்னன்ஒருவன்ஆண்டு வந்தான். மக்கள் அவனை மிகவும் மதித்துப் போற்றினர். தங்கள் உயிரும் கண்ணும் போல் பேணி வாழ்ந்தனர். அம்மன்னனது வெண்கொற்றக் குடையின் கீழ் மக்கள் எவ்விதக் குறையும் இல்லாமல் இன்புற்று வாழ்ந்தனர். அம்மன்னன் உடலில் நரையும் திரையும் தோன்றிக் கிழவனாகி விட்டார்.

ஒருநாள் தன் புதல்வர்கள் மூவரையும் அழைத்தார். புதல்வர்களைத் தன் அருகில் அமரச் சொன்னார். அவர்களைப் பார்த்துக் கூறினார்...

"என் அருமை மைந்தர்களே! நான் தொண்டுக் கிழவனாகி விட்டேன். இனி என்னால் நல்ல முறையில் அரசாள முடியாது. பொறுப்புகளையும் கடமைகளையும் இனி நல்ல முறையில் செய்வதற்கு எனக்குச் சக்தி இல்லை. ஆகையால், நான் கால்நடையாகவே காசிக்குச் சென்று வருகிறேன். அரசாளும் பொறுப்பை நீங்கள் மூவரும் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூறினான்.

மன்னன் அதன் பின்னர் எந்தவிதக் கவலையுமின்றிக் காசிக்குப் புறப்பட்டுச் சென்றார். அவனது புதல்வர்கள் மூவரும் அரசியல் அலுவல்களைத் தம்முள் பகிர்ந்து கொண்டு நாட்டை ஆண்டு வந்தனர். காசிக்குச் சென்ற மன்னனைப் பற்றி ஓர் ஆண்டு வரையில், எந்தவிதமான தகவலும் வரவில்லை. அதன் பிறகு எல்லாரும் வருந்தத்தக்க செய்தி வந்து சேர்ந்தது. "கால்நடையாகச் சென்ற மன்னன் காசிக்குச் சென்றடையுமுன் வழியிலேயே இறந்து விட்டார்" என்னும் துயரச் செய்தி வந்து சேர்ந்தது. மன்னனுடன் சென்றவர்கள் திரும்பி வந்து துயரச் செய்தியைத் தெரிவித்தனர்.

அம்மன்னனுடைய அருமை பெருமைகளை எண்ணி நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கியது. துயரமோ, மகிழ்ச்சியோ என்றும் நிலை பெறுவதன்றோ? சில நாட்களில் எல்லாரும் ஒருவாறு துயரம் நீங்கி, தத்தம் செயல்களில் கவனம் செலுத்தினர். ஒருநாள் ஏழைக் கிழவன் ஒருவன், கிழிந்த உடைகளை அணிந்து கொண்டு அரண்மனை பக்கம் வந்தான்.

"பழைய மன்னவன் இல்லையே!" என்று சொல்லி வாய்விட்டு அழுதான். பலரும் அவனை தேற்ற, அவன் ஒருவாறு மனம் தேறினான். அதன் பின்னர் கிழவன், அம்மன்னவனின் பிள்ளைகளின் நிலைமைகள் பற்றிச் சிலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

தந்தை இறந்த செய்தியைக் கேட்ட நாள் முதலாக முதல் மகன் துயரில் மூழ்கி, வருந்தி வருந்தி இளைத்துத் துரும்பாகி விட்டான். அவனது முகத்தில் பொலிவில்லை. அவன் பேசிய சொற்களில் தெளிவில்லை. அவனது செயல்களில் அவனுக்குக் கவனம் இல்லை. தந்தையிடம் அவன் வைத்திருந்த அன்பு, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டது.

இரண்டாம் மகன், தனக்கு அரசியலில் பங்கு கிடைத்த நாள் முதலாக ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தான். நன்றாக உடை உடுத்துவது, சுவை மிக்கவற்றையே உண்பது, இன்பமாகப் பொழுது போக்குவது ஆகியவற்றில் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

மூன்றாம் மகனுக்குத் தந்தையின் மறைவு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும், "தந்தைக்குப் பின் அவரது பெயர் கெடாத வகையில் நாட்டைப் பொறுப்புடன் ஆள வேண்டுமே. மூத்த அண்ணன் இதனை அறியாமல் துயரத்தில் மூழ்கியிருக்கிறான். இரண்டாம் அண்ணன் கடமைகளை மறந்து, உலக இன்பங்களில் மூழ்கிக் காலங் கழிக்கிறான். எல்லாப் பொறுப்புக்களும் என்னைச் சார்ந்துவிட்டன. மக்களின் நலம் கருதி செங்கோல் செலுத்தும் திறனை இறைவன் எனக்கு அளித்தருள்வானாக. இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று உலகம் சொல்லுமாறு நடந்து கொள்வது தான், மகன் தந்தைக்குச் செய்யத்தக்க கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய நல்ல மனவலிமையையும் ஆற்றலையும் நான் பெறுவது எவ்வாறு?" என்று எண்ணி எண்ணி அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்துத் திட்டமிட்டு அரசியல் அலுவல்களை ஒழுங்காகக் கவனித்து வந்தான்.

அவ்வாறு இருந்து வந்த மூன்று பிள்ளைகளின் நிலைமைகளையும் அக்கிழவனிடம் விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்டறிந்த அக்கிழவன் வேறு எவனும் அல்லன், பழைய மன்னவனாகிய தந்தைதான்.

அம்மன்னவன் திட்டமிட்டு அவ்வாறு செயல் புரிந்தான். தான் இறந்தபிறகு என்ன நடக்கும் என்பதை அறிய வேண்டி, தான் இறந்துவிட்டதாகக் கூறுமாறு தன்னுடன் வந்தவர்களிடம் கூறி, அவர்களை முன்னதாக அனுப்பி வைத்தான். அவர்களும் திரும்பி வந்து அவ்வாறே செய்தனர். பின்னர் மன்னவனே கிழக்கோலத்தில். வந்து, தன் புதல்வர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது மன்னவனுக்குத் தன்மீது உண்மையான அன்புள்ள மகன் எவன் என்பது நன்கு விளங்கிவிட்டது. மன்னன் உடனே அரண்மனைக்குச் சென்றான். தான் பழைய மன்னன் என்பதை வெளிப்படுத்தினான். எல்லாரும் அவனை பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவன் அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்து, தன் மூன்றாம் புதல்வனாகிய இளைய மகனே ஆளுதல் வேண்டும் என்று முடிவு செய்து, அவனுக்கு முடி சூட்டினான்.

இளைய மகனுக்கு முடி சூட்டிய பின்னர், மன்னன் மன அமைதியோடு காசிக்குச் சென்றான். அங்கே தங்கித் தன் இறுதி நாட்களைக் கழித்தான்.

## பழமொழிகள்

- மா பழுத்தால் கிளிக்காம். வேம்பு பழுத்தால் காக்கைக்காம்.
- மாமியார் உடைத்தால் மண் குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்.
- மாரடித்த கூலி மடி மேலே.
- முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?
- மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
- முட்டையிடுகிற கோழிக்கு வருத்தம் தெரியும்.
- முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா
- முதல் கோணல் முற்றுங் கோணல்
- முப்பது வருடம் வாழ்ந்தவனும் இல்லை. முப்பது வருடம் தாழ்ந்தவனும் இல்லை.
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
- முற்றும் நனைந்தவர்களுக்கு ஈரம் ஏது?
- முன் வைத்த காலை பின் வைக்கலாமா?
- முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல.
- முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும்.

## மூளைக்கு வேலை

**இந்த விடயம் செய்வதில் சற்று சுவாரஸ்சியமாகத்தான் இருக்கும்**



**இப்படத்தில் ஆறு வித்தியாசங்கள் இடம்பெற்று உள்ளன. அவை எவை என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...**

## பொது அறிவுத் தகவல்கள்

- உலகிலேயே மிகவுயர்ந்த சிகரம் யாது?
  **எவரெஸ்ட்**
- உலகிலேயே பெரிய எரிமலை யாது?
  **லஸ்கார்(சிலி) 5.990 மீற்றர்**
- உலகிலேயே மிக நீளமான மலை எது?
  **அந்தீஸ்மலை**
- உலகில்லேயே மிகவும் பரந்த கடல் எது?
  **தென்சீனக்கடல்**
- உலகிலேயே பெரிய ஏரி எது?
  **கஸ்பியன் (ரஷ்யா-ஈரான்)**
- உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
  **ஏஞ்சல்ஸ்(வெனிசுவெலா) 979 மீற்றர்**
- உலகிலேயே அதிக மக்கள் தொகையுள்ள நாடு எது?
  **சீனா**
- உலகிலேயே குறைந்த மக்கள் தொகையுள்ள நாடு எது?
  **வத்திக்கான்**
- உலகிலேயே மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் எங்குள்ளது?
  **காரக்பூர்**

தற்பெருமையடிப்பதை எப்போது விட்டு விடுகிறீர்களோ அன்றிலிருந்து உங்களுடைய கௌரவம் வளர ஆரம்பிக்கிறது. - எட்வர்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்த தேரர்கள் முதலில் பேரினவாதத்தை துறக்கட்டும்

தமிழ் மக்கள் தமது உரிமையைப் வென்றெடுக்க சிங்கள மக்களோடு கைகோர்க்க வேண்டுமென அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று அடிக்கடி கூறிவரும் பௌத்த பிக்குகளின் பேரினவாத சிந்தனைகளே இந்த நாட்டில் இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொண்டது.

தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று உச்சரித்த கணப்பொழுதிலேயே இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று பிரித்து ஓதுவதை பௌத்த பிக்குகள் செய்து வருகின்றனர்.

இலங்கை எல்லா இன மக்களுக்கும் உரியது என்று கூறப்படுமாயின் இனப்பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமிருக்காதென்பதுதான் யதார்த்தம்.

எனினும் பௌத்த பீடங்கள் முதல் ஆட்சியாளர்கள் வரையில் இலங்கையை பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனப்படுத்துவதைத் தமது கொள்கையாகக் கொண்டிருக்கும்போது,

தமிழ் மக்கள் தமது உரிமையை வென்றெடுக்க சிங்கள மக்களுடன் கைகோர்க்க வேண்டுமென அத்துரலிய ரத்ன தேரர் அழைப்பு விடுவதற்குள் அடிப்படை நியாயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் சிங்களத் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தின.

ஆனால் நடத்தப்பட்ட அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர் என்பதே உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், நீதியரசர் விக்னேஸ்வரன் போன்ற தமிழ்த் தலைவர்கள் எம்மோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்பது அத்துரலிய ரத்ன தேரரின் கோரிக்கையாக இருக்கிறது.

ஆனால் இவை வெறும் வார்த்தை ஜாலங்களேயன்றி இதற்குள் உண்மையும் நேர்மையும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்துடன் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்தார்.

எனினும் அந்தச் சந்திப்பில் பௌத்த பீடாதிபதிகள் நடந்து கொண்ட முறைமை எவ்வாறாக இருந்தது என்பதை அத்துரலிய தேரர் அறிந்து கொள்ள வேண்டும்.

பௌத்த பீடாதிபதிகளுக்கும் தேரர்களுக்குமான மரியாதை என்பது பௌத்த மக்களிடம் எதிர்பார்க்கப்பட வேண்டுமேயன்றி, ஏனைய மதத்தவர்களும் பௌத்த பீடாதிபதிகளின் முன் மண்டியிட வேண்டுமென நினைக்கின்ற சிறுமைத்தனம் கௌதம புத்தபிரானின் போதனைகளுக்கு முரணானது என்பதை முதலில் பௌத்த துறவிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது அவசியம் என அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட பௌத்த தேரர்கள் விரும்பினால், அதைச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

ஆம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடக்கம் காணாமல்போனவர்களின் உறவுகள் படுகின்ற அவலத்தை ஆற்றுப்படுத்துவது வரையில்; பௌத்த தேரர்கள் கவனமும் கருசனையும் காட்டுவார்களாயின், அது அத்துரலிய ரத்ன தேரரின் அழைப்பை நிதர்சனமாக்கும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

## கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டால்

*யாழ்.போதனா தயார் நிலையில் – பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி*

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்களைப் பாதுகாத்து சிகிச்சை வழங்கத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சீனாவில் கொரோனா தொற்று அபாயம் ஏற்பட்டதனையடுத்து உலகின் பல பகுதிகளிலும் அந்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையிலும் கொரோனா வைரஸால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டதனால், அதனை எதிர்கொள்ளக் கூடிய வகையில் 12 வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சு இனம்கண்டது.

இதில் எமது போதனா வைத்தியசாலையும் ஒன்று. இந்நிலையில் வடக்கிலோ அல்லது யாழ்.குடாநாட்டிலோ அவ்வாறான சந்தேகத்திற்கிடமாக எவராவது காணப்பட்டால் யாழ்.போதனா வைத்தியசாலையிலே அனுமதிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் .

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் ஒரே தடவையில் உச்ச பட்சமாக 10 பேர் இனம் காணப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்காகவே ஓர் விசேட மருத்துவக் குழுவினையும் தயார் செய்துள்ளதாக கூறிய அவர்.சந்தேகத்திற்கிடமான நோயாளி ஒருவர் இனம் காணுமிடத்தில் அவரை குறித்த விசேட மருத்துவக் குழு ஆய்விற்குட்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் பாதிக்கப்பட்டவரின் குருதியின் மாதிரியை எடுத்து பகுப்பாய்விற்காக அனுப்பி உச்ச பட்சமாக 48 மணி நேரத்திற்குள் உறுதியான முடிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## நண்பனிடம் வாங்கிச் சென்ற மோட்டார் சைக்கிளால் வவுனியாவில் கைகலப்பு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மதியம் இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள நிதி நிறுவனத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளினை நிறுத்த முற்பட்ட போது வேறு ஒரு நிதி நிறுவன ஊழியரினால் மோட்டார் சைக்கிள் கையகப்படுத்தி செல்லப்பட்டுள்ள சம்பவத்தால் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்.

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள நிதி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட முச்சக்கர வண்டிக்குரிய தவணைப் பணத்தை செலுத்துவதற்கு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவர் தங்க நகையை அடைவு வைத்து ஒரு' இலட்சம் ரூபாயினை நிதி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நண்பர் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளை வாங்கிசென்ற நபர் தான் செலுத்தி சென்ற மோட்டார் சைக்கிளை குறித்த நிதி நிறுவனத்திற்கு முன்பாக நிறுத்த முற்பட்டபோது குறித்த மோட்டார் சைக்கிளிற்கான தவணைப் பணம் செலுத்தப்பட வில்லை என்று தெரிவித்து வேறு. ஒரு நிதி நிறுவன ஊழியர்களினால் குறித்த மோட்டார் சைக்கிள் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து கையகப்படுத்த சென்ற ஊழியருக்கும் மோட்டார் சைக்கிளினை செலுத்தி வந்த நபருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டு கைகலப்பில் முடிந்ததுடன் முச்சக்கரவண்டிக்கு தவணைப்பணம் செலுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் பணத்துடன் மோட்டார் சைக்கிள் கையகப்படுத்தி சென்றுள்ளதாக தெரிவித்து கைகலப்பில் ஈடுபட்ட போது இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் அழைத்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் அப்பகுதியில் சற்று அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,299)

## போதைப்பொருட்களுக்கெதிராக உறுதியெடுத்துக் கொள்வோம்

**யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன்**

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் நினைவு நாளான இன்று (நேற்று) நாமும் மது உள்ளிட்ட போதைப் பொருட்களைப் பயன்படுத்த மாட்டோம். ஏனையவர்களையும் பயன்படுத்த விடமாட்டோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்வோமென யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகிம்சாவாதி மகாத்மாகாந்தியின் நினைவு நாளை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகமும், அகில இலங்கை காந்தி சேவா சங்கமும், சர்வோதயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள போதைப் பொருள் பாவனைக்கு எதிரான மாபெரும் நடைபவனி நேற்று வியாழக்கிழமை அரி யாலை காந்தி சன சமூக நிலையத்தில் ஆரம்பமாகி யாழ். நகரிலுள்ள காந்தி உருவச் சிலையைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற நிகழ்வில் கூடியிருந்தோர் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-3,18)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நம்பிக்கை கடவுளையும் அசைக்கும். பயம் பலசாலியையும் செயலிழக்க வைக்கும்.

-ஜோயன் ஆஸ்டின்

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

யாகத்தில் சோமபானம் உண்டார்கள் என்பதன் பொருள் மூலாதாரத்தில் உள்ள தீயை அதோமுகப் பிராணனை அடக்கி ஊர்த்துவ முகமாக மேலேற்றி மதி மண்டலமாகிய சோம நிலத்தை வெதுப்பி, அங்கு பெருகும் அமுத தாரையை உண்டார்கள் என்பதுதான் சோமபானம் உண்டார்கள் என்பதன் கருத்து.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வாழ்நாள் மிகக் குறுகியது, வாழ்வு அழிவில்லாதது (அமரத்துவமானது)

வாழ்நாள் மிகக் குறுகிய காலத்தது என்ற உணர்வு ஆற்றலோடு கூடிய இயக்கத்தை உன் வாழ்க்கையில் கொண்டு வருகிறது. வேண்டாத விடயங்களும் மனக் கலக்கமும் வீழ்ந்து விடுகின்றன. எப்போது நீ செயற்பட வேண்டுமோ, முயற்சி செய்ய வேண்டுமா அப்போது வாழ்நாள் குறுகிய காலத்தது என அறிந்து கொள். வாழ்நாள் குறுகிய காலத்தது என உணரும் போது காரியத்தைத் தள்ளிப் போடுவது என்பது நம்மை விட்டுப் போய்விடும். எப்போது பலனை எதிர்பார்க்கிறோமோ அப்போது வாழ்வு அழிவில்லாதது (அமரத்துவமுடையது) என்பதை அறிந்துகொள்.

அறிவிலி அதற்கு மாறாகச் செய்கிறான். பலனுக்காக அவசரப்பட்டு பொறுமையிழந்து ஏமாற்றமடைகிறான். வாழ்வு அழிவில்லாதது என்பதை நீ அறியும் போது பொறுமையின்மை போய்விடுகிறது. நீ செய்த உதவிக்குப் பதிலாக என்ன நன்மை கிடைக்கும் என அல்லது உன்னுடைய நன்மையான செயலுக்குப் பலனை எதிர்பார்க்கும் போது அதைச் சீக்கிரமாகப் பெற விரும்புகிறாய். ஆனால் உனக்கு இன்னும் பல பிறவிகள் உண்டு என நீ அறியும் போது உடனே கிடைக்கவில்லை என்றாலும் தாமதமாகப் பிறகு கிடைக்கும் என்பதை உணர்கிறாய். (தொடரும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## 16 வகை லட்சுமிகள்

**ஸ்ரீசக்திலட்சுமி:-** எந்த வேலையும் என்னால் முடியாது என்ற சொல்லாமல் எதையும் சிந்தித்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்தால் ஸ்ரீ சக்தி லட்சுமி நமக்கு என்றும் சக்தியைக் கொடுப்பாள்.

**ஸ்ரீ சாந்திலட்சுமி:-** நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து வாழ பழக வேண்டும். நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதை இருக்குமிடத்திலேயே நாம் சாந்தப்படுத்த முடியும். ஸ்ரீசாந்தி லட்சுமியை தியானம் செய்தால் எப்பொழுதும் நிம்மதியாக வாழலாம்.

**ஸ்ரீசாயாலட்சுமி:-** நாம் சம்சார பந்தத்திலிருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல கடமையை செய்து பலனை எதிர்பாராமல் மனதை பக்தி மார்க்கத்தில் சாய்ந்து ஸ்ரீசாயாலட்சுமியை தியானித்து அருளைப் பெற வேண்டும்.

**ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமி:-** எப்போதும் நாம் பக்தி வேட்கையுடன் இருக்க வேண்டும், பிறருக்கு உதவ வேண்டும், ஞானம் பெற வேண்டும், பிறவிப் பிணித் தீர வேண்டும் என்ற வேட்கையுடன் ஸ்ரீத்ருஷ்ணா லட்சுமியைத் துதித்து நலம் அடையலாம்.(தொடரும்)

# பாகிஸ்தான் சென்று பதக்கங்களுடன் திரும்பிய குத்துச்சண்டை வீரர்களுக்கு வவுனியாவில் கௌரவிப்பு



பாகிஸ்தானில் பதக்கம் வென்று நாடு திரும்பிய வடமாகாண குத்துச்சண்டை வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் மு.ராதாகிருஸ்ணன் தலைமையில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலை மற்றும் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் என்பவற்றிலும் மாணவர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இலங்கையை பிரதிபலித்து பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச கிக்பொக்சிங் குத்துச் சண்டை போட்டியில் வவுனியாவை சேர்ந்த ஏழு வீரர்கள் கலந்துகொண்டு ஏழு பதக்கங்களை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் லாகூரில் அமைந்துள்ள கடாபி விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடைபெற்ற சர்வதேச கிக்பொக்சிங் குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஏழு குத்துச் சண்டை வீரர்கள் இலங்கைக்கு ஐந்து தங்கப்பதக்கங்களையும், இரண்டு வெள்ளி பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியை சேர்ந்த எஸ்.சஞ்சயன் (வயது 18) தங்கப்பதக்கத்தையும், பி.ராகுல் (வயது17) தங்கப்பதக்கத்தையும், ரி.நாகராஜா (வயது 18) தங்கப் பதக்கத்தையும், வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஆர்.கெ.கெவின் (வயது 11) தங்கப்பதக்கத்தையும், வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவன் கெ.நிரோஜன் (வயது 16) தங்கப்பதக்கத்தையும், வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்தை சேர்ந்த வி.வசீகரன் (வயது 17) என்ற மாணவன் வெள்ளி பதக்கத்தையும், வவுனியா காமினி மகாவித்தியாலயத்தை சேர்ந்த எஸ். சிறிதர்சன் (வயது 18) வெள்ளிப்பதக்கத்தையும் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சர்வதேச குத்துச்சண்டைப் பயிற்சிவிப்பாளரும், பிரன்ஸ் சவாட் குத்துச் சண்டை அமைப்பின் தலைவருமான சி.பூ.பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையில் இருந்து வடமாகாணத்தின் வவுனியாவை சேர்ந்த ஏழு வீரர்களும், தென்னிலங்கையை சேர்ந்த பதின்நான்கு வீரர்களுமாக 21 வீரர்கள் இலங்கையை பிரதிபலித்து பாகிஸ்தானுக்கு பயணமாகியிருந்தனர்.

இவ் வீரர்கள் இலங்கைக்கு 13 தங்கப்பதக்கங்களையும் 06 வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-250)

# கிளி.இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது

அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் ஐ.இராஜரட்ணம், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அநுராகாந்தன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஸ்ட சுற்றாடல் அலுவலர் ப.துவாரகன், பழைய மாணவரும் மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர் வா.ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)





வவுனியா கோவில் குஞ்சுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர் திறன்காண் மெய்வல்லுநர் போட்டி கடந்த 27 ஆம் திகதி பாடசாலை அதிபர் சு.முகுந்தன் தலைமையில் இடம் பெற்றிருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, கௌரவ விருந்தினர்களாக கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.சசிகுமார், உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளராக கெ.செந்தில் குமரன் கலந்து கொண்டனர். (க-299)

# அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

## ஓல்ட் கோல் அணியின் 2 வது வெற்றி



யாழ்.பல்கலைக்கழக அணியும், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தும் மேற்படி தொடரில் 5 ஆவது தகுதி காண் போட்டி கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியில் ஓல்ட் கோல்ஸ் அணி சென்றலைட்ஸ் அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட போது 45.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களை பெற்றனர். பிரியலக்ஸன் -78, நிஸாந்-23, அலன்ராஜ்-13, செல்ரன்-24, டார்வின்-18 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஓல்ட் கோல்ஸ் அணியை சேர்ந்த பிரியலக்ஸன் 10 ஓவரில் 33 ஓட்டங்களை கொடுத்து 03 இலக்குகளையும் நிரோஸன் 8 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், ஜின்துஸன், பிரியன்கன் திலீபன் தலா 01 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

200 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட் கோல்ஸ் அணி 46.1 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ்.மதூஸன் - 12, கஜீபன்-15, தீலீபன் -37, எம்.மதூஸன்-24, பியலக்ஸன் ஆட்டமிழக்காது 52, சிறிகுகன்-17, நிரோஸன்-22, ஓட்டங்களைப் பெற்றனர். பிரியலக்ஸன் நிஸாந் தலா 02 இலக்கினையும், ஜெரிக், ஜேம்ஸ், டார்வின் தலா 01 இலக்கினையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 11 வது ஆண்டாக நடாத்தும் தரவரிசை பட்டியலுக்கு (Rating) ஓல்ட் கோல்ஸ் அணி 8.31 புள்ளிகளையும் சென்றலைட்ஸ் அணி 2.69 புள்ளிகளையும் பெற்றனர். (க)

# வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் வீதியோட்டம்



பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வின் ஒரு கட்டமாக மாணவர்களுக்கான வீதியோட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. காலை 6 மணியளவில் பாடசாலை முன்றலில் ஆரம்பமாகிய இவ் வீதியோட்டமானது ஹொரவபொத்தான வீதியினூடாக 10 கி.மீ தூரம் சென்று மீண்டும் அதே வழியூடாக வவுனியா நகரத்தை வந்தடைந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர்

இப்போட்டியில் முதலாம் இடத்தினை இளங்கோ இல்லத்தைச் சேர்ந்த மிதுர்சிகனும், இரண்டாம் இடத்தினை வள்ளுவர் இல்லத்தைச்சேர்ந்த ஹஸ்மிலனும், மூன்றாம் இடத்தினை இளங்கோ இல்லத்தைச் சேர்ந்த மொரிசனும் பெற்றனர். (க)

## திருக்கேதீச்சர...

பௌத்த காங்கிரஸின் தலைவர் யெகத் சுமதிபால தெரிவித்தார்.

இந்து பௌத்த ஒற்றுமையை ஏற்படுத்தும் முகமாக நேற்றைய தினம் யாழில் இடம் பெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழலுக்கு பின் பௌத்த இந்து ஒற்றுமையின் மூலம் எதிர்கால நாட்டை சுபீட்சமாக மாற்றும் நோக்குடன் பிரதமரும் ஜனாதிபதியும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மூவின மக்கள் வாழும் இலங்கை நாட்டில் சகல இனங்கள் சார்ந்தும் இனவாதிகளும் மதவாதிகளும் செயற்படுகின்றனர்.

இனவாதிகளாகவும் மதவாதிகளாகவும் செயற்படுவோர் மிகக் குறுகிய பகுதியினரே. நாட்டை நேசிக்கும்; பிற இன, மதத்தை நேசிக்கும் மக்கள் அதிகமாக உள்ளனர்.

இவ்வாறான நிலையில் இந்து பௌத்த ஒற்றுமை காலத்தின் தேவையாகக் கருதப்படும் நிலையில் இந்து மக்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க விரதமாகக் கருதப்படும் மகா சிவராத்திரி விரதம் திருக்கேதீச்சரம் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெறுவது வழமை.

திருக்கேதீச்சர ஆலய வளைவு உடைக்கப்பட்டதன் பின்னணி தொடர்பில் எமக்குச் சரியான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

எனினும் பௌத்த இந்து ஒற்றுமையின் வெளிப்பாடாக மகா சங்கத்தினருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## தேசிய கீதம்...

மொழியில் மாத்திரமே பாடப்படும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையிலேயே அமைச்சர் சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பௌத்த இந்து...

பொகவந்தலாவ ராகுல தேரோ என்பவரே இவ்வாறு மாநாட்டில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## ஐ.தே.க தலை...

தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கூடிய செயற்குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த முடிவு தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், சஜித் பிரேமதாஸ தொடர்ந்தும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராகவும் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்கும் தலைமை தாங்குவார் எனக் கூறினார்.

எனவே தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவே கட்சியின் தலைவராக செயற்படுவார் என அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (ம-3)

## மன்னாரில் வீதி...

மன்னார் கட்டை அடம்பன் பகுதியில் நேற்று இரவு ஏற்பட்ட வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கூலர் ரக வானும் மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மன்னாரைச் சேர்ந்த கனகரத்தினம் அஸ்வின்ராஜ் என்பவரே உயிர் இழந்தவராவார்.

உயிரிழந்தவர்கள் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் கடமையாற்றுபவர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-3,286)

## புனித பூமியாக...

பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பின் செயலாளர் சி.மோகன் தெரிவித்துள்ளார்.

இந்து. பௌத்த ஒற்றுமையை வலியுறுத்தி சர்வதேச மாநாடு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

குறித்த மாநாடு தொடர்பான தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சி.மோகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுடைய பாரம்பரிய, பொருளாதார, கல்வி, காணி மற்றும் இன பிரச்சினைகளை அரசியலுக்கு அப்பால் இந்து, பௌத்த பீடங்களை சேர்ந்தவர்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் எனவும் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சி.மோகன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது
ரூபாய் 10 இலட்சம்
மெகா பவர் லொத்தரில்



**யாழ்.பருத்தித்துறை** பகுதியில் **அதிகளவு பரிசில்கள்** வெல்லப்பட்டுள்ள லொத்தர்களினை விற்பனை செய்கின்ற பிரபல விற்பனை முகவரான திரு.**கு.பூபாலசிங்கம் (N-220061)** அவர்களின் விற்பனை நிலையத்தில் 29.01.2020 அன்று சீட்டிழுக்கப்பட்ட **மெகா பவர் (சீ.இல.491)** சீட்டிழுப்பில் ரூபாய் **பத்து இலட்சம்** வெல்லப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
(மாவட்ட விற்பனை முகவர் **வெ.தனிஸ்குமார்** என்பவரிடமிருந்து லொத்தரினை பெற்று விற்பனை செய்பவர் என்பது குறிப்பிடத்தக்கது) (9117)
தேசிய லொத்தர் சபை
மாவட்ட விற்பனை முகவர், விற்பனை முகவர்

## தமிழ் மக்களின்...

முக்கியமான நாள். தமிழ்மக்களின் உடம்புக்கு இன்னொரு உயிர் வந்ததாக நாம் கருதுகின்றோம்.

தமிழர்களும் இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவோம்.

ஆதிமுதல் இன்று வரை உலகளாவிய ரீதியில் பௌத்தமும் சைவமும் ஒன்றிணைந்துதான் செயற்பட்டு வருகிறது. இலங்கையில் ஆதியிலிருந்தது போன்று மீண்டும் பௌத்தர்களும் சைவர்களும் ஒன்றாக இணைந்து பயணம் செய்ய வேண்டும். தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றிணைய வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்து பல வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தைப் பார்க்கும் போது எங்களுக்கு மிகவும் சந்தோசமாகவிருக்கிறது. யாழ்ப்பாணம் தற்போது மிகவும் முன்னேறியிருக்கிறது.

எங்களது வீரர்கள் இந்த நாட்டை மீட்டு தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் கைகளில் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்குமுரியது. தாயின் மார்பில் வாய் வைத்துப் பால் கொடுத்த திருவாயால் பிறர் மனம் நோகாதபடி நாங்கள் வார்த்தைகளை விட்டோமானால் அழகான நாடாக, செழிப்பான நாடாக எங்கள் திருநாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றார். (ம-3,10,18)

## வீதியால் சென்ற...

அறுத்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் நேற்று மாலை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சனநடமாட்டம் மிக்க புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயத்திற்கருகில் பலாலி வீதியில் நடந்துள்ளது.

யுவதியான குறித்த பெண் கோண்டாவிலிலிருந்து குப்பிழான் பகுதியிலுள்ள உறவினரின் வீட்டுக்குத் தனது தாயாரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்த போது பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்படி பெண்ணின் கழுத்திலிருந்த இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு வேகமாகச் சென்றுள்ளனர்.

தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்தவர் அறுத்தெடுத்துச் சென்ற கொள்ளையர்களை கத்தியவாறு குறிப்பிட்ட தூரம் வரை துரத்திச் சென்ற போதும் கொள்ளையர்கள் விரைவாக அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் குறித்த பகுதிக்கு அண்மையாகப் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காணொளியை ஆய்வு செய்ததுடன் விசாரணைகளும் மேற்கொண்டனர். (ம-3,18)

## தமிழர்கள் பிரச்...

பேசுவதற்கு தயாராகவுள்ளோம்.

நாட்டில் இந்து பௌத்த சமயங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்த சில குழுக்கள் முயற்சித்து வருகின்றன. அக்குழுக்களுக்கு எதிராக பௌத்த துறவிகள் முழுவீச்சில் செயற்படுகிறார்கள்.

இந்து சமயமோ, பௌத்த சமயமோ தமது சமயத்தைப் பின்பற்றுமாறு யாரையும் நிர்பந்திப்பதில்லை. அத்தோடு உணவுப்பாசல்களையோ, வீட்டுக்கு கூரைத்தகரங்களையோ வழங்குவதில்லை.

ஆகவே மதமாற்றிகள் அல்லாத இந்து பௌத்த சமயங்கள் ஒன்றிணைந்து எதிர்கால நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான தேவை ஏற்பட்டுள்ள நிலையில் அனைவரையும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு தேரர் அழைப்பு விடுத்தார். (ம-3,10)

## பொறுப்புக்கூறு...

2019ஆம் ஆண்டுக்கான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

அதில் 2009ஆம் ஆண்டு ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் நடத்தப்பட்டன. அவர்களுக்கு எதிரான சுதந்திரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

இதேவேளை முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் முன்னேற்றத்துக்கு மத்தியில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அதன் அறிக்கைகள் இந்த முன்னேற்றங்களை மாற்றிவிட்டது என்று மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. (ம-3)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1580 திகதி 2020/01/30
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 07 64 67 71
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2020/01/30
சீட்டிழுப்பு இலக்கம் 0656
லக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 11 13 15 16

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 30-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2377
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 17 23 59 76
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/01/30
சீட்டிழுப்பு இலக்கம் 4103
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 4 1 0 6 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1118
சீட்டிழுப்பு திகதி 2020.01.30 வியாழக்கிழமை
V 02 17 22 54
மோட்டார் சைக்கிள்களுக்கான விசேட இலக்கங்கள்: 4399120, 9537942
ஸ்கூட்டர்களுக்கான விசேட இலக்கங்கள்: 8179173, 1067376, 9154441, 9922537
ரூ. 100,000/- பணப்பரிசுக்கான விசேட இலக்கம்: 729917
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,740,132
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2020/02/01ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 868
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,718,860/-
வெற்றி இலக்கங்கள் 13 15 27 66
ஆங்கில எழுத்து Q

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1643 சீட்டிழுப்பு திகதி 30/01/2020
வெற்றி இலக்கங்கள் 08 31 66 67 ஆங்கில எழுத்து B
அடுத்த செவ்வாய்க் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 45,728,168
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 30/01/2020 வெற்றி வாரம் 2754 வர்ணம் கபிலம்
கடகம் வெற்றி இலக்கங்கள் 04 05 14 39
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,465,842
2020/01/31 ம் திகதி வெள்ளிக் கிழமை கடும் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1915

# சுயநல அரசியலுக்காக மக்களை பயன்படுத்த வேண்டாம்

## யாழில் ஓமல்பே சோபித தேரர்

(யாழ்பாணம்)

அரசியல் தலைவர்களே உங்கள் சுயநல அரசியலுக்காக மக்களைப் பலிக்கடாவாக் காதீர்கள். நாம் கூறுவதையும் மீறி மீண்டும் மக்களை அரசியலுக்குப் பயன்படுத்தினால் பௌத்த சமயத்தவரும், இந்துசமயத்தவரும் இணைந்து உங்கள் அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைப்பார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் கலாநிதி - ஓமல்பே சோபித தேரர் தெரிவித் துள்ளார்.

இந்து - பௌத்த ஒற்றுமையைக் கட்டி யெழுப்பும் பொருட்டு பௌத்த - இந்து ஒற்று மைக்கான சர்வதேச மாநாடு நேற்று வியாழக் கிழமை யாழில் சிறப்பாக இடம்பெற் றது.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். (ம-3.10.18)

# கொரோனா தொற்று என சந்தேகிக்கப்படும்

## 17 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி யுள்ளதாக சந்தேகிக்கப்படும் 17 பேர் IDH எனப் படும் கொழும்பு நோய் தொற்றியல் நிறு வனத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் அறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப்பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன், நோய்த் தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்பட்ட ஐவர் நேற்று முன்தினம் வைத் திய சாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்களின் இரத்த மாதிரிகளை சோத னைக்குட்படுத்தியபோது, கொரோனா தொற் றுக்குள்ளாகவில்லை என உறுதிப்படுத்தப் பட்டதை அடுத்தே இவர்கள் வைத்தியசாலை யிலிருந்து வெளியேறியுள்ளனர். (ம-3)

## சிங்களத்தில் தேசியகீதம்

# தமிழ் மக்களை புறக்கணிக்கும் செயல்

## ஐ.தே.கட்சி

(கொழும்பு)

சுதந்திரதின நிகழ்வில் தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரம் பாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை தமிழ் மக்களை புறக்கணித்ததாகவே கருத முடி யும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடு என்ற ரீதியில் முன்னேற வேண்டு மாயின் தமிழ் - முஸ்லிம் மக்களின் தனித்து வங்களுக்கும் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அனைத்து இன மக்களுக்கும் முன்னுரிமை வழங் கப்பட்டன. தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் மற்றும் பொது உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதன் காரண மாக தேசிய நல்லிணக்கம் முன்னேற்ற மடைந்தன.

இதன் பின்னரே இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் நல்லெண்ணம் ஏற்பட்டது. ஆனால் இந்த நிலைமை இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (ம-3)


**A/L DAY CLASS**

**புவியியல் - N.BABU**

DMI- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
C.C.A - சுன்னாகம்
ஆட்ஸ் அக்கடமி - புத்தூர் (C-9095)

புதிய தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும். T.P-0779365087

**யா/ பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை**

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2020**

காலம் – 31.01.2020 வெள்ளிக்கிழமை
நேரம் – பிற்பகல் 1.30 மணி
இடம் – பாடசாலை மைதானம்

**தலைவர்.**
திரு. R. தேவதாசன் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
தேசபந்து- தேசகீர்த்தி
லயன் அ.கிருபாகரன் அவர்கள்
அதிபர், கிருபாலேணர்ஸ்

பாடசாலைச்சமூகம்,
யா/ பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. (C-9118)

**சிவப்பு மணல் விற்பனைக்குண்டு**

பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் ஏற்ற மிகச்சிறந்த சிவப்பு நிற மணல் மண் எம்மிடம் விற்பனைக்குண்டு. பளைப்பகுதி தொடக்கம் ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் யாழ்.மாவட்டம் எப்பகுதியிலும் டிப்பர் மூலம் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டு வந்து எம்மால் இறக்க முடியும்.

தொடர்பு:- (C-9099)

0776491027, 0779400963

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**அன்பு வெளியீடு**

தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் 2020 ஆசிரியர் **திரு.வே.அன்பழகன்** அவர் களின் தரம் – 5 மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன. தனியார் கல்வி நிலையங் கள், பாடசாலைகள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (C-9115)

அன்பொளி கல்வியகம்
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**Annual Inter-House Athletic Meet**

On

**Saturday 1st February 2020**

at 8.30 a.m.

Chief Guests:

**Mr.S.Sutharsan**

Divisional Secretary, Divisional Secretariat, Jaffna.

&

**Mrs.Pathmapiriya Sutharsan**

Teacher, Jaffna Hindu Ladies College

All are cordially invited.

**Principal, Staff & Students St.John's College, Jaffna.** (C-9114)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK-550*/=Kg (C-8785)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS

**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

**அருள்**

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி. நெல்லியடி. (C-9015)

**பணியாளர்கள் தேவை**

அலுவலக பணியாளர் பெண்

வடிவமைப்பாளர் ஆண்/பெண்

அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

02.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 முதல் 1.00 வரை

(2162) SMART DIGITAL PRINTING

#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com

MUG, BANNER, OFFSET, SCREEN PRINTING


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.